லுருவானகுருத்தேடவேண்டாம்நீயும்
 வுத்தமனேசாஸ்திரந்தான்குருநூலாகுந்
திருவானமாதுவந்துநிர்த்தஞ்செய்வாள்
 செகஜாலங்கூத்தைவிட்டுத்தெளிந்துநில்லுங்
கருவானசாஸ்திரத்தைப்பார்க்கும்போது
 காற்றிருப்பானுரோமனென்றுங்கண்டுகொள்ளே. ()

இரசசிந்தூரம்.

கொள்ளவேகோழியைத்தான்சோதித்தாக்காற்
 குருவென்றிரசமதுதானியங்கிநிற்கும்
விள்ளவேயதையெடுத்துச்சொல்லக்கேளும்
 வெண்மையாங்குகையில்வைத்துயுருக்கிப்பாரு
மள்ளவேயுருசியதுமணிபோல்நிற்கும்
 மப்பனேயதையெடுத்துச்சொல்லக்கேளுங்
கள்ளமென்றுயெண்ணாதேசொர்ணமையா
 கண்டிடைக்குச்சரிக்கூட்டியுருக்கிடாயே. (௱௭௬)

உருக்கியேசிந்தூரமாகச்சொல்வோ
 முத்தமனேகேந்தியதுநாலத்தொன்று
தருக்கியேதாளகந்தான்மூணத்தொண்ணூத்
 தான்கூட்டிக்குதும்பைசார்தனைவிட்டாட்டி
முருக்கிலைசார்முச்சாமமரைத்துக்கொண்டு
 முதிராமன்மெழுகுபோல்வட்டுப்பண்ணி
யருக்கியகலில்வைத்துப்புடத்தைப்போடு
 யாத்தாட்கும்வடுசனுக்கும்பூசைபண்ணே. (௱௭௭)

குதும்பைகூத்தங்குதம்பை.

பண்ணியேசிந்தூரம்பணங்காலுண்ணும்
 பறக்குமேமேநோயெல்லாமண்டலத்தி
லெண்ணியேசாயசித்தியென்னசொல்வேன்
 யேழையுஞ்சொல்லிவிட்டேனைஞ்ஞூற்றுக்குள்
புண்ணியமேசெய்தவர்க்குயின்னூற்கிட்டும்
 போக்கோடேகருக்களெல்லாம்நன்றாய்த்தோணுங்
கண்ணிலேகண்டபொருள்தன்னைப்போல
 காட்டுமடாகருக்கண்முறைவாதந்தானே. (௱௭௮)

தாமெனன்றசிந்தூரம்வெள்ளிநூற்றில்
தாக்கிடவேயாத்தென்னவெட்டுமாகு
மூமென்ற * குடவனிலேபத்துக்கொன்று
முத்தமனேகொடுத்திடவேயாறுமாத்தா
மேமென்றசாத்திரங்கள்மெத்தவுண்டு
யிதமாகநான்பார்த்தப்படியேசொன்னேன்
தேமென்றயமிர்தமடாயிந்தநூலு
செப்பினேன்சாத்திரத்தில்தெளிந்துநானே. (ருஎசு)

* குடவன்-பித்தளை.

வெடியுப்புச்சுண்ணம்.

தெளிந்துமேசொல்லுகிறேனின்னங்கேளுந்
திரமானவெடியுப்புசெயநீர்தன்னை
னொழிந்ததொருவெடியுப்புயைத்தாங்சாக்சன்
மோகமிதுசொல்லுகிறேன்முப்பூவின்போக்கு
களிர்ந்ததொருவுப்பென்றுமிதற்கும்பேரு
கம்பியுப்புவெடியென்றுயிதற்கும்பேரு
மொழிந்ததொருபடியென்றுமிதற்கும்பேரு
முத்தமனேயிதின்பெருமையுரைக்கிறேனே. (ருஅய)

உரைக்கவேகம்பியுப்புபலமோபத்து
வுத்தமனேவயச்சட்டிக்குள்ளேவைத்து
திரைக்கவே * சுணங்களுடவெண்மலமும்மூன்று
நோராகதுரிசியதுபலமுமொன்று
சிறக்கவே * சீனமொன்று * காறந்தானுந்
திரம்போலவெண்காரமிவைரெண்டுந்தான்
னறைக்கவேவகையொன்றுபலமரைதான்கூட்டி
யப்பனேகல்வமதிற்பொடியாய்பண்ணே. (ருஅக)

* சுணங்கன்-நாய் * காறம்-முப்புச்சுண்ணம் * சீனம்-படிகாரம்.

பண்ணவேவயச்சட்டியடுப்பில்வைத்து
பாங்குபெறவுப்பதனையதின்மேற்கொட்டி
கண்ணவேயடுப்பேற்றியுப்புருகமட்டுங்
கசிந்துமேயுருகையிலேசெப்பக்கேளும்
முன்னமேபொடித்ததொருதூளேயப்பா
முறைமுறையாய்த்தூவிவிடுபுகையடங்கமட்டுஞ்
சொன்னதொருபொடியெல்லாமானபின்புந்
துப்பறவாய்தானெடுத்துயப்பால்வையே. (ருஅ௨)

சாரம்.

அப்பாலேவைத்ததொரு வுப்பைமைந்தா
வறைக்கவேகலவமதிலிட்டுக்கொண்டு
வெப்பானசாரமதைசொல்லக்கேளு
வெண்மையென்றகோழிமலங்கொண்டுவந்து
தப்பாதேயண்டத்தின்வெண்கருவைவிட்டு
தானாய்பாயிருசாமமெழுகாய்ப்போகும்
முப்பானசாரமது * கங்கிபூட்ட
வுத்தமனே * யுவரில்வைத்துபுடத்தைப்போடே. (கஅரு)

* அங்கிகவஞ்செய்து * யுவர்க்கலர்மண்ணு.

போடவேயைந்தருவிற்புடத்தைப்போடு
பொங்காமல்வெடியாமன்னிறகும்பாரு
நாடவேயெடுத்ததனைநிறுத்துக்கொண்டு
நாட்டுவாய்வெடிதனக்குநாலத்தொண்ணு
தேடவேபோகாதுவிந்தநீரை
திறமைபெறசொல்லிவிட்டேனிந்தநூலில்
கூடவெ * வெலியாலம்பாலைவார்த்து
குமறவேதானணாத்துப்பீங்கானிலப்பே. (கஅச)

* எலியால் காட்டாமணக்கு.

அப்பியேபனியில்வைக்க செயநீராகும்
அப்பனேபீங்கானிலெடுத்துக்கொண்டு
தப்பியேபோகாதுசரக்கெல்லாந்தாந்
தட்டுண்டுகெட்டுமடாசெயநீராலே
வொப்பியேபாஷாணமொன்பதுந்தா
னொடுங்குமடாயிதினுடையவாடைகண்டா
லப்பியேயிதைவிட்டுஇன்னமொன்று
யறுவகையின்மைந்தனேசெயநீர்சொளே. (கஅரு)

ஆறுவகைசெயநீர்.

கேளடாவெடியுப்புபலமோபத்து
இருபைபெறவேணுமென்று வபச்சட்டிலிட்டு
தேளடாகொட்டுதல்போல்சுண்ணமாக
செப்புகிறேன் * தேசியுடகபாலம்வாங்கி
சோளடாவாராயலிருந்துக்கொண்டு
கூட்டுவாய்பலமொன்றுவின்னங்கேளு
நாளாடாதுருசோடுசீனக்காரம்
நலமானவெண்காரம் பூநீர்கூட்டே. (கஅசா)

✳ தேசிகபாலம் குதறைமட்டை.

கூட்டியே நவாச்சாரம்வகையொன்றுக்கு
கூறுவேன் பலமொன்றுபொடியாய்ச்செய்து
நாட்டியேமுன்பொடியோடொக்கக்கூட்டி
யப்பனேவெடியுப்புவருகும்போது
ஆட்டியேகொஞ்சமாய்த்தோண்டிக்கிண்டி
யுத்தமனேயுட்கொண்டுவாங்கும்பாரு
வாட்டியேபொடியெல்லாஞ்சென்றபின்பு
வழிததுமேகலவமதிலிட்டுக்கேளே. (சஅஎ)

கேளடா நவாச்சாரம்பச்சையாக
கெட்டியாய்பலனமந்துயெடுத்துக்கொண்டு
நாளடாவெடியுப்புசுண்ணத்தோடே
நன்றாகசேர்த்தரைப்பாயெருக்கன்பாலால்
சூளடாயிருசாமமறைத்துக்கொண்டு
துப்பறவாய்பீங்கானிலப்பியேதான்
வாளடாபனியில்வைக்கசெயநீராகும்
மைந்தனேகுப்பிதனிலடைத்திடாயே. (ரு அஅ)

அடைத்துமேவடுகனுக்குப்பூசைபண்ணி
யாத்தாளைதியானித்துசொல்லக்கேளும்
படைத்துமேயவள்பதத்திலர்ச்சித்தேதான்
பாங்குபெறகுப்பியைநீயப்பால்வாங்கி
சடைத்துமேபோகாதோயென்றாப்பூசை
சதாநித்தியமவள்பதத்தைதொண்டுபண்ணு
நடத்துமேயவளுடையகிருபைதானும்
நாதாக்கண்மறப்பையெல்லாம்நீக்குவாளே. (ரு அகூ)

தாளகச்சுண்ணம்.

நீக்கவேமுன்னுரைத்தசெயநீர்தன்னை
நீயெடுத்துசாக்குகளிற்றோய்த்துபோடு
யாக்கவேகட்டுண்டுயிறுகிப்போகு
மாகராவாதமதில்யெல்லாஞ்சொல்வேன்
சேர்க்கவேதாளகத்தைசெயநீர்தன்னில்
திறமையாய்தான்துவைத்துறவியிற்போடு
காற்கவேமூனுநாளானபின்பு
காக்கிணத்தினிலேயறைத்துகவசம்போடே. (ரு கூ0)

கெவுரிக்கட்டு.

போடவேசுண்ணமதுயென்னசொல்வேன்
 பொலிந்துமேநீறுமடாதாளகந்தான்
நாடவேதாளகச்சுண்ணந்தன்னை
 நலமாகத்தானெடுத்துச்சொல்லக்கேளுந்
தேடவேகெவுரியைத்தான்ஜெயநீராலே
 தீர்க்கமாய்த்தான்துவைத்துராவியிற்போட்டுப்
பாடவேதாளசத்தின்சுண்ணத்தாலே
 பலமாகக்கவசமிட்டுப்புடத்தைப்போடே. (௩௬௧)

இலிங்கக்கட்டுச்சிந்தூரம்.

புடத்திலேகெவுரியுந்தான்கட்டிப்போகும்
 பொருமியேசுண்ணும்பாயிருக்கும்பாரு
திடத்திலேசுண்ணமதையெடுத்துக்கொண்டு
 திறமையாயிலிங்கமதுக்கங்கிபூட்டி
* விடத்தலையின்வேரரைத்துயதின்மேற்காட்டி
 விருதுபெற்றஞ்செருவிற்புடத்தைப்போடு
தடத்திலேயிதைப்போற்பாரையுண்டோ
 தான்கட்டிப்போகுமடாலிங்கர்தானே. (௩௬௨)

* விடத்தலை - விடத்தாறி.

தானென்றலிங்கமதுகட்டிப்போகுந்
 தனையெடுத்துக்கலவத்திலிட்டுக்கொண்டு
மூனென்ற * நாதமுடன் * வெடியுங்கூட்டி
 மூசத்தியாந்தாளகமுங் * கெந்திகூட்டி
மானென்றதங்கமடாமேக்குதானு
 மைந்தனேவகையொன்றுபலங்காலாசத்
தேனென்றகட்டியதோர்லிங்கமொன்று
 சேரவேகலவத்திலிட்டுக்கேளே. (௩௬௩)

* நாதம்-இரசம் * வெடி-பொட்டிலுப்பு * கெந்தி * கந்தம்.

கேளடாயாறுநீர்தன்னாலாட்டிக்
 கெட்டியாய்த்துட்டதுபோல்வட்டுபண்ணி
வாளடாமூன்றெருவிற்புடத்தைப்போடு
 மார்க்கமாய்க்காட்டியதுநிற்கும்பாரு
சூளடாமறுபடியுங்கல்வத்திட்டுத்
 துடியானகந்தகத்தையதிற்குட்பாதி

சோளடாவாராமற்கூட்டிக்கொண்டு
கொடுமைபெறப்பழச்சாற்றாலாட்டித்திரே. (௱௯௪)

※ பழச்சாறு - எலுமிச்சங்கனிரசம்.

திறவோவிதனிற்காயப்போடு
திறமையாய்ப்பொடிப்பண்ணிக் ※ குப்பிக்சேற்றி
வாறவே ※ வாலுகையில் ※ தாளிவைத்து
மணலிட்டுக்குப்பியதினுள்ளேவைத்து
ஆறவேபனிரண்டுசாமந்தானும்
அப்பனேமுன்போற்றெறித்தப்பின்பு
சேறவேமூன்றுநாட்குப்பிவாங்கித்
தேவியைநீபூசித்துடைத்துப்பாரோ. (௱௯௫)

※ வாலுகை-அடுப்பு ※ தாளி-மிடா.

பார்க்கவேசிந்தூரமென்னசொல்வேன்
பவளம்போலிருக்குமடா ※ தளத்திலேதான்
ஏற்கவேபணவிடைதாந்தேனிற்கொள்ள
என்னசொல்வேன்காயமதுயிறுகிப்போகுங்
காற்கவேவாசிதானடக்கும்பாரு
கண்கொள்ளாச்சோதியதுவேகமெத்த
சேற்கவேகுளிகையைத்தான்பூட்டிக்கொண்டு
திசைகளெட்டும்வெல்லுமிதுதிறமிதாமே. (௱௯௬)

※ தளம் - அடியில்.

திரமானசிந்தூரம்வெள்ளிநாற்றிற்
செலுத்திவிடுவிராசனிடையொன்றுவீத
முரமானமாற்றதுவுமெட்டுமாகு
மோ-கோ-கோ-விதன்பெருமையுணாக்கப்போகுஞ்
சிரமான ※ வாகாசகம்பியாலே
செயிக்குமடாநவலோகமெல்லாந்தங்கம்
பரமானபராபரத்தின்விந்துவாகும்
பார்தனிலேவிள்ளாதேயெவர்க்குந்தானே. (௱௯௭)

※ ஆகாசகம்பி-கம்பியுப்பு.

ஆர்க்குமேசொல்லாதேசெயநீர்போக்கை
யாவெனக்குச்சத்தியமாய்ச்சொன்னவித்தை
சேர்க்கையாய்ச்சித்தரெல்லாங்கூடிக்கொண்டு
சிரமாகவறுவகைநீர்தன்னையப்பா

பார்க்கவேயவரவர்கள்மறைத்துச்சொன்னார்
　பாவம்வருமென்றுசொல்லிமனதிலெண்ணிக்
கார்க்கவேவேணுமென்றுகிருபையாகிக்
　கட்டினேன்சாஸ்திரத்தைக்கருதிப்பாரே. (௱௯௮)

கருதியேசித்தரெல்லாங்கூடிக்கொண்டு
　காட்டினார்சாஸ்திரங்களனேகங்கோடி
உறுதியாய்வாதயதுசெய்யச்சொல்லி
　யொளித்தார்கள்கருக்களெல்லாமொளித்துவைத்தார்
* பருதி * மதியுப்புதனைமனதுக்கேற்ற
　படிசொல்லிவைத்ததினால்விபரமில்லை
அறுதியாய்ச்சொல்லிவைத்தார்பச்சைபாக
　அப்பனேயிதையறிந்துவாதம்பாரே. (௱௯௯)

* பருதி சூரியன் * மதி-சந்திரன்.

வாதமென்னகொஞ்சத்திற்கிட்டுமோசொல்
　மகத்தானபெரியோர்க்குந்தொண்டுபண்ணி
நாதமென்னநாதத்தின்விபரந்தன்னை
　நாதாக்கண்பதமறிந்துவிபரங்கேளும்
வேதமென்னவந்தரத்தின்பொருளுந்தோணும்
　வேதாந்தசாஸ்திரத்தினறிவுகாணும்
பாதமென்னவுப்புதனையறியவேணும்
　பரத்தினுடதிட்டையிலேபணிந்துநில்லே. (௨௱)

தில்லென்றுயானுரைத்தசாஸ்திரத்தில்
　தினைவாகமனதில்வைத்துக்குருவென்றெண்ணி
சொல்லென்றுதியானித்துபூசைசெய்யச்
　சோதித்துவுன்மனதிற்சொல்லும்பாரு
கல்லென்றுகரடுமுதலுருகிப்போகும்
　கருத்தில்வைத்துயென்னூலைப்பார்த்தபேர்க்குங்
கொல்லென்றுகூற்றுவனுமொதுங்கிப்போவான்
　கொடியதொருசமாதியிலேயிருந்துபாரே. (௨௱௧)

பூநாகச்சத்து.

இருந்துமேபூநாகச்சத்தைக்கேளு
　மென்னசொல்வேன்செம்மணலிற் * பூநாகந்தான்
பருத்துமேபெரிதாகவிருக்கும்பாரு
　பட்டவிட * மதியைப்போற்சோதிகாணும்

திருத்துமேலையத்துபலமெடுத்துக்கொண்டு
 தேராவின்பால்தனிலேபோட்டாயானால்
வெறுத்துமேமண்ணையெல்லாங்கக்கிப்போடும்
 வேற்படவேபூநாகம்பிழிந்துவாங்கே. (௨௱௨)
 ※ பூநாகம்-நாக்குப்பூச்சி-※மதி-செம்பு-அதேசந்திரன்.
வாங்கியேகோவையிலேச்சாற்றிலூட்டி
 மைந்தனே ※ ரவிமுகத்திற்காயப்போட்டு
நீங்கியேகருப்பாகவிருக்கும்பாரு
 நினைவாகக்காய்ந்பின்பெடுத்துக்கொண்டு
தாங்கியேகலசமதிலிட்டுநீயுஞ்
 சார்வான ※ சூடனதுபலங்காற்போடு
ஓங்கியேமண்செய்துபுடத்தைப்போடு
 உத்தமனேயிருபத்திற்புடத்திற்காணே. (௨௱௩)
 ※ இரவி-சூரியன் ※ சூடன்-கற்பூரம்.
காணவேபுடமாறியெடுத்துப்பார்க்க
 கருப்பென்றதிறம்போகும்வெண்மையாகுந்
தோணவேபற்பத்தையெடுத்துக்கொண்டு
 சொல்லுவேன்சரக்குவகையின்னங்கேளும்
வேணவேவெண்காரம்பலமரைதான்போட்டு
 விருதுபோற்றுனைப்பாய்க்காடிவார்த்து
ஊணவேவில்லையாய்த்தான்பிடித்துக்கொண்டு
 வுத்தமனேபத்தெருவிற்புடத்தைப்போடே. (௨௱௪)
போடேவேபற்பந்தானெடுத்துக்கொண்டு
 புகழ்பெறவேகாடிதனிலூறவைத்து
நாடவேநாலாநாட்டெளிவிறுத்து
 நாட்டுவாய் ※ சூதமது ※ களஞ்சியாது
ஓடவேவிட்டுநீசையாற்றேய்த்து
 உத்தமனேரசமதுதான்செம்பிற்றுக்கு
கூடவேரசமெல்லாமொன்றாய்த்தேய்த்துக்
 கூட்டியேகெட்டியாயுண்டைசெய்யே. (௨௱௫)
 ※ சூதம்-இரதம் ※ கழஞ்சு-நாற்பதுகுன்றிடை
செய்தவுண்டை ※ குகையில்வைத்துக் ※ சாரங்கூட்டித்
 தீர்க்கமாயுருக்கிப்பார்செம்புமாகுங்

கொய்தசெம்பைத்தானெடுத்துருக்கிப்பாரு
கோடிரவிபோலிருக்குஞ்சத்துவேகந்
தொய்தமென்றபூநாகச்செம்பையையா
சுருக்கமாய்ச்சொல்லுகிறேன்வேதைமார்க்கம்
வெய்தமென்றகுளிகைக்குக்கொடுத்தாயானால்
வேகமதாயதிவேகம்பசியுண்டாமே. (௨௱௬)

※ குகை - மூசை ※ காரம்-ஜெயநீர்.

உண்டானசெம்பிடைக்குத்தங்கங்கூட்டி
யுத்தமனேகுகைதனிலுருகும்போது
பண்டானநாகமடாநாலத்தொன்று
பருங்கண்ணைதானொடுங்கிக்கூட்டியிவாய்
குண்டானகலசமதிலுருக்கிச்சாய்ப்பாய்
கொட்டவேதூளாகநொருங்கும்பாரு
பண்டானதாளகமுங்கெவுரிகூட்டி
பண்பாகக்கலவமதிலரைத்திடாயே. (௨௱௭)

அரைக்கவேசெவ்வல்லிபூச்சார்விட்டு
அப்பனேநாற்சாமமரைத்தபின்பு
யுரைக்கவேரவிதனிற்காயப்போடு
உத்தமனேபொடிபண்ணிக் ※ குப்பிக்கேற்றித்
திறைக்கவேவாலுகையின்மேலேவைத்து
தீயெரிப்பாய்பனிரண்டுசாமந்தானு
மறைக்கவேவில்லையடாசிந்தூரத்தை
மைந்தனேராக்காலமாறப்போடே. (௨௱௮)

※ குப்பி-புட்டி.

போடவேநாலாநாட்குப்பிவாங்கிப்
பூரணியைப்பூசித்துதியானஞ்செய்து
ஆடவேவேணுமென்றால்சொல்லக்கேளு
அப்பனேகுப்பித்தானுடைத்துப்பாரு
நாடவேசெம்முருக்கம்பூப்போலாகும்
நலமானசிந்தூரங் ※ குன்றியுண்ணு
தேடவேயனுபானந்தேனிலூட்டுச்
சிவசிவாயுன்தேகமருணனாமே. (௨௱௯)

அருணனென்றசிந்தூரம்வெள்ளிநூற்றில்
அளித்திடவேமாற்றென்னபனிரண்டாகுந்

தருணமென்றவென்தாயைப்பூசைபண்ணிச்
சகலகலைசித்தெல்லாஞ்சொல்லாள்தாயார்
கருணமென்றபஞ்சகாணபூதத்தாலே
காட்டுவாளண்டபகிரண்டமெல்லாம்
மருணமென்றநாலைவிட்டதோஷத்தாலே
வந்ததட பிரபஞ்சமாயைதானே. (௨௱௰)

தானென்றபூநாகச்சிந்தூரத்தைச்
சாற்றினேன்சித்தருடசபையில்நின்று
கோனென்றசித்தரெல்லாங்கூடிக்கொண்டு
கொழுப்படாபாடினதுவென்றுகேட்டார்
தேனென்றதக்ஷணத்திற்பொதிகைநாயன்
சின்மயத்தினுத்தரவாற்றெளிந்துசொன்னேன்
மானென்றவென்குருவும்புசண்டர்சொல்ல
வசனித்தேனென்னூற்றில்மகிழ்ந்துகாணே. (௨௱௰௧)

இந்திரகோபச்செம்பு.

காண்பதென்னன்னூற்றினின்னங்கேளு
கனமானவிந்திரமாங்கோபச்செம்பை
ஆண்பதென்னபொருளென்றுமெண்ணிடாதே
யாத்தாளுமப்பனுமேயணைந்தநாதம்
தூண்பதென்னமின்னலுக்குள் ※ சோமனாலே
துப்பறவாய்ரவிபோலேகாந்தியாச்சு
பாண்பதென்னபூமியிலேமெத்தவுண்டு
பார்த்துநீகொண்டுவந்துசொல்லக்கேளே. (௨௱௰௨)

※ சோமன் சந்திரன்-அதேசெம்பு.

கேளடாமலமதுதானிருபத்தஞ்சு
கிருபைபெறக்கலவத்திவிட்டுக்கொண்டு
நாளடாதுரிசியதுபலந்தானாலு
நலமானவெண்காரம்பலந்தான்மூன்று
வாளடா ※ வெடியுப்புபலமோரண்டு
வளமானவீரமதுபலமுமொன்று
சூளடா ※ குடோரியதுபலமும்ரண்டு
சொல்லுவேனிவையெல்லாங்கலவத்திட்டே. (௨௱௰௩)

※ வொட்டியுப்பு-பொட்டிலுப்பு ※ குடோரி-மாத்திரை.

இட்டுமேபூநாகம்பலந்தானொன்று
இவையெல்லாம்விட்டரைக்கவசையக்கேளு

கட்டுமேயவுரியிலேச்சாற்றுச்சாமங்
சருங்கோழிரத்தமதுமூன்றுசாமம்
மொட்டுமே * யாடுதின்னுப்பாளைச்சாறு
முத்தமனேமுச்சாமமரைத்துக்கொண்டு
வெட்டுமேவெள்ளாட்டுரத்தமோடு
விழுதுபடத்தானரைப்பாய்சாமம்நாலே. (உாயச)

* ஆடுதின்னுப்பாளை-ஆடுதொடாமூலி.

நாளானவாடுதின்னுப்பாலேச்சாறும்
நாற்சாமந்தானரைத்துச்சொல்லக்கேளு
பாலானசாறுவகையரைக்கும்போது
பற்றவேகாய்ந்தபின்புமறுச்சார்வாரு
சேலான * வெலியாலம்பாலேவிட்டுத்
திரள்வரைமுச்சாமந்தீர்க்கமாக
காலானகாசதுபோல்வில்லேபண்ணிக்
கனத்ததொரு * குகைதனிலமுத்திடாயே. (உாயரு)

* எலியால்-காட்டாமணக்கு * குகை-மூசை.

அமத்தியே * சரவுலேயில்வைத்துக்கொண்டு
அப்பனேதுரித்தியிட்டுச்சொல்லக்கேளு
சமத்தியென்றவென்தாயைப்பூசைசெய்து
சாதகமாய்வயக்கிண்ணீற்றுரித்திரண்டு
செமத்தியேகரியைநன்றாய்ச்செமத்திபூது
திரளவேமணிமணியாயிறங்கும்பாரு
கமுத்தியேமேலோடுகொண்டுமூடி
கட்டாகவஞ்சுதிரமூதிடாயே. (உாயசா)

* சரவுலே-சரம்வைத்தூதுதல்.

ஊதியேமணிகளெல்லாம்பொறுக்கிக்கொண்டு
வுத்தமனே * சறடெல்லாமமுங்கலூது
வாத்தியேசத்தெல்லாமொன்றாய்ச்சேர்த்து
வப்பனே * காரமிட்டுருக்கிப்பாரு
நீதியாய்ச்செம்பையினியென்னசொல்வேன்
நிறமென்னசூரியன்போற்காந்தியாகும்
பாதியாய்மதிதரித்தயீசன்செம்பை
பார்ப்பதற்குக்கண்ணுண்டோபாருள்ளோர்க்கே. ()

* சறடு - அழுக்கு * காரம்-ஜெயநீர்.

பார்தனிலிச்செம்பைக்கண்டபோதே
    பரனுனதுவசமாவார்பாருபாரு
கார்காலந்தனிற்றழைத்தவிருட்சம்போலக்
    காணுமடாவெயத்தொழிலுங்கண்கொள்ளாது
சீர்தனிலிச்செம்பைவெள்ளிநூற்றிற்
    செலுத்திநீயொன்றிடவேமாற்றென்னசொல்வேன்
சோதனைக்குமாற்றென்னவிருபத்தஞ்சு
    சிரமைமெத்தத்திரமைமெத்தயின்னங்கேளே. (௨௱௰௮)

கேளடாயிச்செம்பைமதவானைக்கிய
    கீர்த்திபெறக்கொடுத்துவிடென்னசொல்வேன்
வாளட்டசோடசமாங்கலையுண்டாச்சு
    மைந்தனேகொடுமையென்றாற்கொடியவேகம்
சூளடாயண்டத்திற்செல்லும்போது
    சோதிபடாரவிகோடிகாந்தியாகுந்
தாளடாயிச்செம்பைவைத்துக்கொண்டு
    தான்செய்யும்வகைசொல்வேனின்னங்கேளே. (௨௱௰௯)

இன்னமுநான்சொல்லுகிறேன்செம்பின்போக்கை
    யிலக்காகச்சொல்லிவைத்தார்சித்தரெல்லா
முன்னமுநான்சொன்னதொருதொழிற்களெல்லா
    முப்பூவின்கருவதற்சொவ்வாதப்பா
கன்னமுள்ளசரக்குகளைக்கட்டிக்கொள்ளுங்
    கண்டவுடன்பாஷாணஞ்செத்துப்போகும்
வன்னமுள்ளட்டசித்துவசியமுண்டா
    மைந்தனேயிதின்பெருமைவாழ்த்துவேனே. (௨௨௰)

வாழ்த்துவேனிச்செம்பை * குகையிலிட்டு
    மைந்தனேயுருகையிலேபலமதொன்று
அழுத்தமுள்ளதங்கமடாபலந்தானென்று
    அப்பனேநாகமொன்றுகொடுத்தாயானாற்
பழுத்ததொருமூன்றினமுருக்கிக்கொண்டு
    பாங்குபெறக்கலவத்திலாட்டும்போது
கொழுத்ததொருகளங்கமதுநொருங்கும்பாரு
    கூறுவோமிதன்பெருமைகூறுவோமே. (௨௨௧)

* குகை- அதேமூசை.

கூறுவோஞ்சரக்குவகையின்னங்கேளு
கொடியதொருதாளகமுஞ் * சிலையுங்கந்தி
தாறவேசெவுரியோடப்பிரேகத் * துத்த
மப்பனே * வெடியுடனே * சூதங்கூட்டி
நீறவே * குலாமல்லிச்சாறுதன்னால்
நிகழவேநாற்சாமமரைத்தபின்பு
ஆறவேமாந்துளிரின்சாற்றினாலே
அன்பாகவரைத்திடுவாய்சாமம்நாலே. (௨௨௨)

* சிலைமனோசிலை * துத்தம்-பாற்றுத்தம் * வெடி-வெடியுப்பு
* குலாமல்லி - முட்செவ்வந்தி.

நாலானசாமமடாவரைத்தபின்பு
நலமாகக்காய்ந்தபின்சொல்லக்கேளு
சேலானதொன்றுமில்லைசெம்பருத்தம்பூச்சாற்
சிறக்கவேநாற்சாமமரைத்துக்கொண்டு
மேலானரவிதனிலுலறப்போட்டு
மேன்மையாய்பொடிப்பண்ணிக்குப்பிக்கேற்றி
சூலானசூன்மிகுந்துகற்பமாச்சு
சொல்லுவேனிதன்பெருமைசொல்லுவேனே (௨௨௩)

சொல்லுவேன்வாலுகையின்மேலேவைத்து
துப்புரவேமுன்போற்பாகஞ்செய்து
வெல்லுவேன் * முத்தியின்விபரங்கேளு
வேதாந்ததீபமடாவிளக்கும்நாலு
சொல்லுவேன்கமலம்போற்றீபந்தானுந்
திறமைபெறநாற்சாமந்தீர்ந்தபின்பு
அல்லுவேனுனைக்கிறேன்மூன்றுநாளில்
அப்பனேநாற்சாமமகோரமாமே, (௨௨௪)
* முத்தி-கமலாக்கினி-டாக்கினி-தீயாக்கினி,

அகோரமென்றவக்கினிதானாலுசாம
மப்பனேவெரித்தபின்புசொல்லக்கேளு
வகாரமென்றசொல்லிதுக்குட்சொல்லப்போமோ
மைந்தனேயிராக்காலமாறப்போட்டு
சிகாரமென்றவென்தாயார்பார்வதிபாதஞ்
சிறக்கவேபூசைபண்ணித்திறத்தைக்கேளும்
நகாரமென்றபட்டணத்திற்குடியிருந்த
நாதாந்தசத்திக்குவாமம்வைபே. (௨௨௫)

வாமம்வைத்துப்பூசைபண்ணிச்சொல்லக்கேளு
 மார்க்கமாய்வைரவர்க்குப்பூசைசெய்து
ஓமம்வைத்துயென்குருவையர்ச்சனைசெய்து
 வுத்தமனேயென்னைநீநினைந்துகொண்டு
காமம்வைத்தபேய்போலலைந்திடாதே
 கவடுவைத்தால்வைரவனுஞ்சாபமீவார்
சோமம்வைத்தகுருநாதன்பூசைபண்ணி
 சொல்லுவேன்குப்பியைநீயப்பால்வாங்கே. (௨௨௬)

வாங்கியேகுப்பியைநீயுடைத்துப்பாரு
 மைந்தனேசிந்தூரமென்னசொல்வேன்
தாங்கியேயெடுத்துநீசிமிளில்வைத்து
 தாய்பாதத்திற்பூசைபண்ணிக் *குன்றியுண்ணு
தூங்கியேதிரியாதேகாயச்சித்தி
 சொல்லுவேன் * மண்டலத்திற்சித்தியாகு
யோங்கியேநரைகளெல்லாவண்டுபோலா
 * மோ-கோ-கோ-சோதிநிறமாகும்பாரே. (௨௨௭)

* குன்றி-குண்டுமணி * மண்டலம்-நாற்பதுநாள்.

* இவ்வடிவு - ஆச்சரியக்கோல்.

சோதியென்றசிந்தூரவெள்ளிதன்னிற்
 சொல்லுவேனாயிரத்திலொன்றுயோடு
மாதியென்றமாற்றதுதானிருபதாகு
 மப்பனேபச்சைவன்னங்கண்ணேகூசும்
வாதிகளேசிந்தூரஞ்செய்வீராகின்
 மகத்ரானசிவலோகமெல்லாந்தங்கம்
நீதியாய்ச்சொல்லிவைத்தேன்சிந்தூரத்தை
 நிலைத்ததொருசித்தரெல்லாமொளித்தார்பாரே. (௨௨௮)

ஒளித்தாரேசித்தரெல்லாம்பேசிக்கொண்டு
 ஓகோ-கோ-யிந்திரமாங்கோபச்செம்பை
யொளித்தாரேசருக்களெல்லாம்வெளிவிடாம
 லொருகுழியாவெட்டிங்கேபுதைத்தார்பாரு
களித்தானேயொருவருக்குந்தோணாதென்று
 கபடமாயவர்மனங்கருதிக்கொண்டார்
வளித்தானேமையதனால்வகையறிந்தும்
 வழிகண்டுபார்ப்பதாற்றேணுந்தோணே. (௨௨௯)

தோணுதுவென்றுசொல்லிவிட்டிடாதே
சொற்பெரியநாதாக்களாட்டமெல்லாங்
காணுதுகாணுமடாவுற்றுப்பார்த்தால்
கருவதனைக்குருசொல்லக்காணவேணுங்
கோணுதுவென்னுடையநூலைப்பார்த்தால்
கூறுவேன்கருமறைப்புமொன்றுமில்லை
பேணுதுபிரபஞ்சத்தன்னைப்பாரார்
பேரின்பமுத்தியிலேசேர்க்கும்பாரோ, (௨௱௰)

சேர்க்கவேசொல்லுகிறேனின்னங்கேளு
திறமாகச்சுத்திலகைஜெயநீர்தன்னில்
பார்க்கவேவெடியுப்புநாலாங்காச்சல்
பரிவாகப்பல * ஈரொட்டெடுத்துக்கொண்டு
ஆர்க்கவே * யயச்சட்டிதன்னிலிட்டு
அப்பனேசரவுலையில்வைத்துவூது
கார்க்கவேகவுசிகொண்டுருகும்போது
* கதிரவனாள் * சுணங்கனுட * கபாலம்வாங்கே (௨௱௧)

* ஈரொட்டு-பதினாறு.

* அயச்சட்டி-இருப்புபாண்டம்,

* கதிரவனாள்-ஆதிவாரம் * சுணங்கன்-நாய்.

* கபாலம்- மண்டை.

வாங்கியேயுவர்மண்ணிற்சிறுநீர்விட்டு
மைந்தனேகலக்கியதைத்தெளியவாங்கி
ஓங்கியேவண்டவோடதனைநீயு
மொருஜாமமூறவைத்துனாக்கக்கேளு
தாங்கியேயடுப்பேற்றித்தணலைமூட்டு
தயவாகவெண்ணெய்க்கிவெளுத்திருக்குந்
தூங்கியேதிரியாதேகபாலவோட்டைத்
திறமாகத்தான்கழுவியுலரப்போடே. (௨௱௨)

போடவேரவிதனிலேகாய்ந்தபின்பு
புகழுவேன்மாவாக்கியெடுத்துக்கொண்டு
தேடவேவேண்டாங்காண்பலந்தான்மூன்று
திறமானபூரமுடனன்னபேதி
நாடவேவளையலுப்புயிந்துப்போடு
நலமானசருப்பூரஞ்சாரஞ்சேரு

வாடவேவகைகொன்றுபலமொன்றாக
வப்பனே * சீனமொன்றுகாரமிரண்டே. (௨௬௩)

* சீனம்-படிகாரம்.

* காரம் - வெண்காரம்.

ரெண்டானவிவையெல்லாம்பொடியாய்ப்பண்ணி
நேர்ப்பானகபாலமதிற்சேர்த்துக்கொண்டு
தண்டானவெடியுப்புருகும்போது
தாக்கடாவதனையுஞ்சுண்ணமாச்சு
குண்டானவிவையெல்லாங்கொண்டபோது
கூறுவேன்வழித்துயினிகலவத்திட்டு
பண்டானவீரமதுபலந்தானைந்து
பருவமாய்க்கூடவிட்டாட்டிடாயே. (௨௬௪)

ஆட்டுவாயெலுமிச்சம்பழச்சார்தன்னா
லப்பனேயிருசாமமரைத்தபின்பு
கூட்டுவாய்மாதளையின்பழச்சாற்றாலுங்
கொடியபுளிப்பாயிருக்குமதினாற்சாமம்
நீட்டுவாய் * மயனப்போலானபின்பு
நேர்ப்பாகவில்லைதட்டியுலரப்போடு
சூட்டுவாய்ரவிதனிற்காய்ந்தபின்பு
துப்பரவாய்ப்பூநீற்றைபுடத்திற்போடே. (௨௬௫)

* மயனம்போல்-மெழுகுபோல்.

புடத்தையினிப்போடுகிறவிபரங்கேளு
பூநீறாயகலில்விசற்கனமேபோடு
தடத்தையினிச்சொல்லுவேன்மக்கண்ணீங்கட்
டாணிடுவாய்வில்லைதனைப்பூநீர்தன்மேல்
படைத்ததொருபூநீற்றையதன்மேற்கொட்டி
பாங்காகவேயமுத்தியோடுமூடி
சடைத்துநீபோகாதேயெருதானைந்திற்
றுணிடுவாவிபுடமாகும்பாரே. (௨௬௬)

ஆகுமடாபுடமாறியெடுத்துக்கொண்டு
அப்பனேசாரமதுபலந்தானஞ்சு
போகுமடாதிருகுகள்ளிப்பாலைவார்த்து
பொங்காமல்தானரைத்துப்பீங்கானிலப்பி
வேகுமடாபனியில்வைக்கஜெயநீர்தானு
மென்சொல்வேன்வாருதிபோலாகும்பாரு

நாகுமடாஜெயநீரைப்பீங்கானுள்ளே
தானடைத்துதேவிமுன்வைத்திடாயே. (உ௩எ)
வைத்துமேபூசைசெய்துயப்பாகேளு
வாகானசரக்குகளைத்தோய்த்துப்போட்டால்
நைத்துமேசுத்திபதுயென்னசொல்வேன்
நலமாகச்சரக்குசுத்திதிறமாம்பாரு
வத்துமுதற்செம்புவனாகாச்சிற்றேய்க்க
விதமாககளிம்பற்றுசுத்தியாகுஞ்
சேத்துமேசரக்குகளைகட்டுங்கட்டுந்
தீர்க்கமடாசொர்னநிறங்கொடுக்கும்பாரே. (உ௩அ)
பாரேநீ * கோழியண்டந்தன்னிலேதான்
பராபரியாடைலமதுசொல்லக்கேளு
சேரேநீவீரமுடன்பூரங்காரந்
திறமானசீனமுடன்கெளரிச்சாரந்
தேரோநீலிங்கமுடன்வெடியுங்கந்தி
தீர்க்கமாந்தாளகமும்நாகஞ்சூதம்
வேரேநீயெண்ணுதேவகையொன்றக்கு
மீறுதேபலமொன்றுவீதஞ்சேரே. (உ௩௯)

* கோழியினண்டம்-கோழிமுட்டை

வீதமென்னவகையெல்லாங்கலவத்திட்டு
வெண்மையென்றகோழியுடனண்டம்வாங்கி
நீதமென்றயண்டமதுயைப்பத்தொன்று
நிரமைதிறமஞ்சளென்றதிறமாந்தன்னை
நாதமென்றமஞ்சணிறக்கருவினாலே
நயம்படவேசாமம்நாலரைத்தபின்பு
சூதமென்றநெல்லுபோல்வில்லைதட்டி
துப்பறவாய்க்கலசமதில்லடைத்திடாயே. (உ௪ய)
அடைத்துமே * பூப்புடத்திற்றைலம்வாங்கி
யப்பனே * வாலைதன்னைத்தியானஞ்செய்து
படைத்துமே * வஸ்துவொடுசுத்திவைத்து
பாலமுதுவடைபருப்புபாமானங்க
ளுடைத்துமேதென்னங்காய்மற்றவர்க்க
முத்தளமாய்புஷ்பத்தைநிரையாச்சாத்தி
மடைத்தனமாய்த்திரியாதேதியாபனஞ்செய்து
வந்திறங்குந்தயிலமதையின்னங்கேளே. (உ௪௧)

* பூப்புடம்-குழிப்புடம் * வாலை-திராவகமிறங்குஞ்சாகம்
* வஸ்து-மதுபானம்.

கேளடாதயிலமதுபீங்கானுள்ளே
கெட்டியாய்த்தானிறக்குமென்னசொல்வேன்
கோளடாவாராமலப்பால்வாங்கிக்
கொடியதொருவிரமதுபலமேலாட்டு
நாளடாகொடிரவியில்வைத்துநீயும்
நான்மூன்றுங்கடந்தபின்பெடுத்துக்கொண்டு
சூளடாவயிரவனைத்தியானஞ்செய்து
சொல்லுவேன்மதிதனிலேதடவிப்போடே. (௨௪௨)

போடவேமாற்றென்னபத்தரையுமாகும்
போக்கோடேயிரும்புமுதற்பழுக்கும்பாரு
தேடவேபணமிடைதான்பனவெல்லத்திற்
றின்னுவிடுகாயசித்தியென்னசொல்வேன்
நாடவேமண்டலத்தினரையுமாறும்
நாதாக்கண்மலைதோறும்வைத்தார்பாரு
ஓடவேகெவுனமதுசென்றுயானு
னூறிவருந்தயிலமதைக்காணலாமே. (௨௪௩)

காணலாஞ்சித்தருடமறைப்பையெல்லாங்
கடிசானகெவுனமாங்குளிகையாலே
தோணலாமந்திடத்திற்செல்லும்போது
தொண்டுபண்ணுநீயவரைக்காக்கவேணும்
மூணலாமுன்மனதையந்திடத்தி
லுறுதிவைத்துதவத்தினிலிருந்தாயானாற்
பூணலாஞ்சித்தர்வந்துதொந்தமாகிப்
போக்கேடேயுதசமதையீவார்பாரே. (௨௪௪)

ஈயவேவாங்கிவந்துகாயசித்தி
யிதமானபோக்குனக்குச்சொல்லுவார்கட்
டோயவேசித்தராற்சொல்லவேணும்
தொண்டுபண்ணிநின்றவரைவணங்கவேணும்
மாயவேவேண்டாம்நீயென்றுசொல்லி
மைந்தனேயந்நூற்றில்வாறுசொன்னேன்
சாயவேதயிலமொன்றுவிதற்குப்பேரு
தப்பாதுதகமென்றுஞ்சாற்றலாமே. (௨௪௫)

இலிங்ககட்டு மெழுகு.

சாற்றவேதயிலமதையெடுத்துக்கொண்டு
தப்பாமலிங்கத்துக்கங்கிபூட்டி
ஆற்றவேகறிபோட்டில்வாட்டுவாட்டு
அப்பனேமெழுகாகுங்கட்டிப்போகும்

வாத்தவேவெள்ளிசெம்பிலீந்தாயானுன்
    மாற்றென்னபத்தரைமாற்றுகாணுந்
தாத்தவேசரக்குகளிற்றொய்த்துப்பேடு
    சாருண்டுவெதுமெழுகாகிக்கட்டுந்தானே. (உசசு)

தாளக்கட்டுத்தைலம்.

கட்டவேசொல்லுகிறேனின்னங்கேளு
    கருவானதாளகத்தின்தயிலந்தன்னை
கொட்டவேமுன்சரக்குப்பலமும்பத்து
    குமுரவேசுத்திசெய்துசொல்லக்கேளு
ஆட்டவேகெவுரியுடன்வீரம்பூர
    மப்பனேரசமுடனேவெடியுமொன்று
ஓடவேபன்றியுடகொழுப்பைவங்கி
    யுறுதிபெறத்தானரைப்பாயொன்றாய்த்தானே. (உசஎ)

ஒன்றானபலமொன்றுவகையதொன்று
    கொடுக்கவேகல்வமதிற்கூடப்போட்டு
பன்றியின்கொழுப்பதனாலாட்டிக்கொண்டு
    பக்குவமாய்ச்சாமமதுநாலுந்தானும்
வென்றானவில்லையதுசிறுசாய்த்தட்டி
    விதமாகரவிதனிலேசாமம்வைத்து
குன்றானகலசமதில்வில்லைவைத்துக்
    கூறுவேனதன்மேலேபூநீற்போடே. (உசஅ)

போட்டுமேகலசமாய்சீலைசெய்து
    புகழ்பெறவேதார்தனிலேதமர்தான்போடு
ஊட்டுமேவஞ்சுதமர்சவுக்கமாக
    வுத்தமனேதானிட்டுசலாக்கைவைத்து
நீட்டுமேகுழிதன்னையுமிருசாண்மட்டம்
    நினைவாகத்தான்கிண்டிசேறுசெய்து
மூட்டுமேயதினுள்ளேபீங்கான்வைத்து
    முன்குளியின்வாய்தனிலேகலசம்வையே. (உசகூ)

வையப்பாபீங்கானில்வாயில்நின்று
    வட்டமாய்மண்ணதனால்மூடிபோலே
மெய்யப்பாசொலவிவைத்தேனின்னங்கேளு
    வெண்மையாய்நாகசரங்கட்டைபோலே
பொய்யப்பாசொல்லவில்லைகுழாய்போற்செய்து
    பூட்டடாதமர்துகளைவாய்க்குந்தன்னிற்
செய்யப்பாசீலைமண்வலுவாய்ச்செய்து
    தீர்க்கமாயேமுமண்ணுத்திரமாய்ச்செய்யே. (உருய)

திரமாகச்செய்தபின்புகலசந்தன்னைத்
தீர்க்கமாய்த்தாறுமட்டுமட்டமாக்கி
உரமாகமணற்பரப்பியதின்மேல்சேரு
வுலைபொருந்தவாய்வலையமேட்டைவைத்து
தரமாகயதைச்சுற்றிக்கவிழ்ந்தாய்போலே
தார்க்கலையமூடிக்கரியையக்கொட்டி
உரமாகக்கரிமேலேவிராட்டியிட்டு
வுத்தமனேதீயிட்டுத்தியானஞ்செய்யே. (௨௫௧)

செய்யவேவைரவர்தியானத்தோடு
தீர்க்கமாய்சத்தியையும்பூசைசெய்து
வெய்யவேயிவர்களுடதியானத்தாலே
வெருண்டெழுந்ததையிலமிறங்கும்பாரு
நையவேசரக்கெல்லாங்கரைந்துபொங்கி
நாகத்தின்வழியிறங்கித்தைலம்நிற்கும்
பொய்யென்றுபூசையைநீமறைந்தாயானால்
போக்கோடேதைலமிறங்காதெண்ணே. (௨௫௨)

எண்ணவேதைலமிறங்குமட்டு
மென்தாயர்பூசையைநீமறந்திடாமற்
கண்ணவேவயிரவர்கள்நெஞ்சில்வைத்து
கண்மூச்சுமத்தியிலேகருத்தைப்பூணி
பண்ணவேதியானத்தால்தைலந்தானும்
பார்க்கவேசீங்கானிலிறங்கிநிற்கும்
தண்ணவேதயிலமதையப்பால்வாங்கி
தானிடுவாய்விரமதில்பலந்தானொன்றே. (௨௫௩)

ஒன்றானவீரமதைப்பொடித்துவிட்டு
வுத்தமனேரவிதனிலேயொருநாள்வைத்து
குன்றானசீங்கானிற்பதனம்பண்ணிக்
கொட்டுவாய்ரோக்கதனைப்பலந்தானொன்று
தென்றானசொர்ணமென்றரோக்கையுந்தான்
தீர்க்கமாய்த்தோய்த்துவிடக்கலந்துபோகும்
பன்றானதைலமடாயென்னசொல்வேன்
பராபரியாள்நாதமென்றுபேருமாச்சே. (௨௫௪)

போரானதயிலமதைச்சித்தரெல்லாம்
பேசியேயொளித்தார்களெல்லாருந்தாம்
காரானகைலாசச்சட்டைநாதர்
காட்டினார்திலகவிதியிருநூற்றுக்குள்

நேரானபுசண்டருடகிருபையாலே
நேர்த்தியாயிதைத்தெளிந்ததன்னூற்சொன்னேன்
வாரானதைலத்தில்பெருமைதன்னை
வசனித்தேனின்னமுந்தான்வங்கையைக்கேளே. (௨௫௫)

கேளடாதைலமதைமண்டலந்தான்
கிருபைபெற்றுக்கொண்டிடவேகாயசித்தி
கோளடாவாராதுநரையும்போகுங்
கொடியதொருதிரைகளெல்லாம்வாங்கும்பாரு
பாளடாபோகாதுநரம்பையெல்லாம்
பம்பரம்போலாகவிறுக்கிக்கொள்ளும்
வாளடாநமனுக்குநமனாய்நின்று
வாழ்ந்திடுவாய்*கற்பாந்தகாலந்தானே. (௨௫௬)

* கற்பகாலம்-கோடியுகம்.

தானென்றதைலமதைவெள்ளிசெம்பிற்
றடவியேபுடம்போடப்புடத்திலேதான்
வானென்றமாற்றென்னயத்துமாகு
மைந்தனேயிரும்புமுதற்பழுக்கும்பாரு
கோனென்றசரக்குகளுமெழுகுமாகுங்
கூறுவேன்கட்டினமுமிதுவேயாகும்
ஊனென்றதைலங்கள்செய்யும்போது
ஒழுங்காகவிம்முறைகள்செய்துகொள்ளே. (௨௫௭)

கொள்ளவேவாதமுறைகருக்கெல்லாங்
கூறுவேனிருநூற்றைம்பதுக்குள்
அள்ளவேமுப்பூவின்மார்க்கஞ்சொன்னேன்
அனேகமாங்குறுக்குவழிபரிசினமுஞ்சொன்னேன்
மெள்ளவே * பூவெடுக்கவிவரஞ்சொன்னேன்
வேதாந்தமனோன்மணியாம்பூசைசொன்னேன்
கள்ளமேவாராதுஇன்னங்கேளு
கருவானசரக்குவைப்புகாட்டுறேனே. (௨௫௮)

* பூ-இஃது முதற்குறைமுப்பூ.

துருசுவைப்பு.

காட்டுவேன்வாதத்திலாதியென்ன
கருவானதுருசினுடவைப்புகேளுஞ்
சூட்டுவேன் * சினமதுபலந்தானும்
துப்பறவாய்வெடியுப்புபலந்தானும்

கூட்டுவாய்கல்லுப்புசேர்தானெட்டு
    கூறுறவேபொடிபண்ணிச்சொல்லக்கேளும்
பூட்டுமேவன்செம்பானபாண்டந்தன்னிற்
    பொடித்திட்டுப்பழச்சாறுந்தயிரும்வாரே. (உருக)

* சினம்-படிகாரம்.

வார்த்துமேபழச்சாறுபடிதான் * ரண்டு
    மைந்தனே * சரிமேதைத்தயிர்தானென்று
பார்த்துமேகலக்கிட்டுச்சிலைமண்செய்து
    பக்குவமாயனையளவுகுழிதான்வெட்டி
சார்த்துமேயோட்டைடலத்திருத்திலைத்தி
    கவியவேதான்மூடிமண்ணுங்கொட்டி
தூர்த்துமேமூடிவிட்டாறுதிங்கட்
    டொச்சமறக்களந்தபின்புசொல்லக்கேளே. (உசுய)

* ரண்டு-வடமொழி
* சரிமேதை-கருப்பெருமை.

சொல்லுவேன்துருசென்றபெருமாச்சு
    சொற்பெரியமூலமொன்றுபெருமாச்சு
வெல்லுவேன்வாதவித்தைதனக்கேயாதி
    வேதாந்தசாரமென்றுமிதற்கேபெரு
கொல்லுவேன்குதத்தையென்றுநின்ற
    குடோரமுள்ளமதயானைக்கோவிக்கோவி
யில்லுவேன்சாக்குகளைத்தலைதூக்காமல்
    பீடாங்கக்கட்டுகிறகுருவுமாயே. (உசுக)

வீரவைப்புத்திராவகம்.

குருவானவீரத்தின்வைப்புக்கேளு
    கூறுவேன்வெடியுப்புசேர்தானஞ்சு
உருவானசினமதுசேர்தானாறு
    வுத்தமனேயிதிற்பாதிபொடித்துப்போடு
கருவானதிவையெல்லாங்கலவத்திட்டு
    கடுகவனா * மேனியென்றசாற்றினாலே
திருவானரவிதனிலேகாயப்போட்டு
    சிர்பெறவேபொடியாக்கிப்பானைக்கேற்றே. (உசுஉ)

* மேனி-குப்பைமேனி.

ஏற்றியே * வாலுகையின்மேலேவைத்து
    என்னசொல்வேன்சக்கரமாம்வாலைதன்னை
போற்றியேபாண்டத்திற்கவிழ்த்துநீயும்
    புகழ்பெறவேசிலைமண்வலுவாய்ச்செய்து

ஆற்றியேமண்ணாலேகுழாவைப்பண்ணி
அப்பனே * வாலையுடமூக்கிற்சேர்த்து
வாற்றியேயென்தாயைப்பூசைபண்ணி
மைந்தனேயனலையிட்டுத் * திநீர்வாங்கே. (௨௬௩)

* வாலுகை-அடுப்பு.

* வாலை-திராவமிறக்ககுழாயாயுள்ளபாண்டம்.

* திநீர்-திராவகம்.

வாங்கையிலேசுத்தவெள்ளைவருகும்பாரு
மார்க்கமாய்விசிவிட்டப்பால்நீயுங்
காங்கையிலேயதிசமானால்நீர்ச்சிவந்து
கடகடவென்றேயிறங்கும்பீங்கானுள்ளே
தாங்கையிலேயிவையெல்லாங்குடத்தில்வாங்கி
சார்வாகவைத்தபின்புசொல்லக்கேளு
தூங்கையிலேகண்டதொருசகுனம்போலச்
சொற்பனமாயென்றுதேயின்னங்கேளே. (௨௬௪)

கேளடாறுதமதுசேர்தானன்று
கெடிபெறவேயோட்டில்வைத்திராவகத்தைக்குத்தி
குளடாநெருப்பில்வைத்துவறுக்கும்போது
துப்பறவாய்மாப்போலாகும்பாரு
கோளடாவாரமற்சினைமூன்று
கொடியதொருவெடியுப்புபலமுமூன்று
வேளடாவெரிந்தசிவன்பூநீற்காலும்
* வெள்ளையென்றபாஷாணம்பலமிரண்டே. (௨௬௫)

* வெள்ளைபாஷாணம்-சங்குபாஷாணம்.

ஒண்டானவுப்பதனைவறுத்துப்போடு
நேரானசாரமதுபலந்தானொன்று
தண்டானதுரிசதுவும்பலந்தான்ரண்டு
தான்வறுத்துப்போட்டுவிட்டின்னங்கேளு
தெண்டானவன்னமென்றபேதிதானுஞ்
சேர்க்கவேசொல்லுகிறேன்பலமிரண்டு
குண்டானதிவையெல்லாஞ்சூநத்துவிற்
கொட்டியேதான்கலக்கிக்குப்பிக்கேற்றே. (௨௬௬)

ஏற்றியேவாலுகையின்மேலேவைத்து
யென்னசொல்வேன்கமலம்போற்றீயைமூட்டு
போற்றியேசெந்தூரம்வைத்தாற்போலப்
போக்கோடேமன்னனவுதுறநூமட்டா

மாற்றியேமுச்சாமந்தியைப்போடு
மப்பனேயடுப்பேற்றிமறுநாண்மூட்டு
ஆற்றியேநாலாநாட்பனிரண்டுசாமந்
துப்பறவாய்த்திமூட்டியப்பால்வாங்கே. (உகூள)

வாங்குவதுகுளிரநன்றாயாறவிட்டு
வாகுபெறவடுப்பைவிட்டிறக்கிநீயும்
தாங்குவதுபோலேநீ * குப்பிதன்னைத்
தானுடைத்துப்பார்த்திடவேயென்னசொல்வேன்
பாங்குபெறத்தேங்காய்போலிருக்கும்பாரு
பருவமாய்த்தானுதிர்த்துப்பலந்தானெட்டு
எங்குவதுபோலேநீயெண்ணிடாதே
யிதமாகச்சேர்க்கும்வகையினிமேற்கேளே. (உகூஅ)

* குப்பி - சாக்குபுட்டி.

இனியதொருசரக்குவகையின்னங்கேளு
இயல்பானகல்லுப்புப்பலந்தானாறு
கனியதொருபூநீறுபலந்தான்ரண்டு
கண்டமொன்றதுருசுதான்பலமும்நாலு
வனியனெனுஞ்சீனமதுசொல்லக்கேளு
மைந்தனேபலமதுதானொன்றனாயுமாகும்
பிணியனென்றுநோயகலுஞ்சாரந்தானும்
போக்கோடேபலமரைதான்புகழாய்க்கூட்டே. (உகூகூ)

கூட்டவேவெடியுப்புபலந்தான்கேளு
குறையாமலொன்றனாயாம்பலமேதூக்கி
வாட்டவேயிவையெல்லாங்கல்வத்திட்டு
வப்பனேதுருசுப்புவறுத்துப்போடு
காட்டவேயொன்றுமில்லைதிராவகத்தினாலே
கனக்கவேயரையாதேமந்தித்தப்பா
ஊட்டபேசிறுதணலில்வறுத்துக்கொண்டு
உத்தமனேகுப்பிதனிலடைத்திடாயே. (உளய)

அடைத்துமேமயனாவாசிமட்டும்போட்டு
அப்பனேவாலுகையில்முன்போல்வைத்து
படைத்துமேமுச்சாமந்தியைப்போடு
பருவமாய்ராக்காலமாறப்போட்டு
விடைத்துமேநாலாநாட்டியைப்போடு
விபரமுடன்பனிரண்டுசாமமாகு
முடைத்துமேஐந்தாநாட்டன்னினீயு
முற்றுநீபார்த்திடவேவிரந்தானே. (உளக)

நானென்றவீரமதையென்னசொல்வேன்
　சதாசிவனார்நெற்றிக்கண்தானேயாகுங்
கோனென்றவீரம்விட்டால்வாதம்போச்சு
　கொடியதொருசுண்ணமையாவிதனிற்கோடி
தேனென்றபாரங்கிவைப்புதீர்க்கமில்லை
　திரும்பவதைமடித்துவைத்தாற்றிறமதாகும்
ஊனென்றவீரத்தின்போக்கைச்சொன்னேன்
　உத்தமனேயெத்தொழிலும்பிறதாணுமே. (௨௭௨)

ஆகுமேமற்றமற்றவீரமெல்லாம்
　அப்பனேவைத்தியத்துக்காகும்பாரு
மேருமேயிந்தமுறைவீரந்தானும்
　போக்கோடேயெத்தொழிலுஞ்செய்யலாகும்
வேறுமேயிவ்வீரச்சுண்ணமானால்
　வெகுசுருக்குவாதமுறைக்குள்ளாகுஞ்
சாகுமேசரக்கெல்லாஞ்சுண்ணமாகுந்
　தனித்துநின்றபூரத்தின்வைப்புகொள்ளே. (௨௭௩)

பூரவைப்பு.

கேளடாகூடனதுபலந்தானொன்று
　கெட்டியாய்ப்பூநீறுபலமொன்றும்
நாளடாவெடியுப்புக்கழஞ்சரண்டும்
　நாட்டுவாய்கல்லுப்புகழஞ்சியொன்று
சூளடாசாரமதுகழஞ்சிவொன்று
　துப்பறவாய்வெண்காரங்கழஞ்சியொன்று
கோளடாவாரமற்கல்வந்தன்னில்
　கொட்டியேதானரைக்கக்கூறுவேனே. (௨௭௪)

கூறவேகல்லுப்பைவறுத்துப்போட்டுக்
　கொடியதொருசாக்கையெல்லாஞ்சுகமாய்ப்போடு
ஆறவேபசுவினெய்யதிலேகொஞ்சம்
　அப்பனேவிட்டுதீரவியிற்போடு
ஊறவேசாமமதுசென்றபின்பு
　உத்தமனேகூடனதுபொங்கிநிற்குந்
தேறவேபூதமென்றுமறுகால்தீயுந்
　தீர்க்கமாங்கூடனதிற்கழஞ்சிபோடே. (௨௭௫)

போட்டுமேபுழுகதிலேகழஞ்சிகூட்டிப்
　பொங்காமல்நெய்யைவிட்டுமறுகாலாட்டு
ஊட்டுமேயுறுதியாயாட்டிக்கொண்டு
　உத்தமனேசாமமதுசென்றபின்பு

நாட்டுமேகாசியென்றமேருக்கேற்றி
　　நாதாந்தசத்தியைநீபூசைபண்ணி
தேட்டுமெயிதைவிட்டாற்றேட்டமுண்டோ
　　சிவசிவாதாளிதனில்மணலைக்கொட்டே. (௨௭௬)
கொட்டியேநாலுவிரற்கனந்தானப்பா
　　கூறுவேன்கல்லுப்பைப்பொடியாய்ப்பண்ணி
எட்டியேநெற்கனமாயதின்மேலிட்டு
　　உறுதிபெறக்குப்பிதனைநடுவில்வைத்து
கட்டியேமணலைக்கழுத்துமட்டுங்
　　கனக்கவேசொப்பனிட்டுசொல்லக்கேளு
மட்டியாய்த்திரியாதேகுப்பிவாயை
　　வழுக்கமாய்த்திறந்துநீவைத்திடாயே. (௨௭௭)
வைத்திட்டுவாலுகையிற்றீபம்போல
　　மைத்தனே * கடிகையதுசென்றபின்பு
பொய்த்திட்டுப்போகாதுபுகைமேற்செல்லும்
　　பொருமியேகுப்பிவாயுடைத்துப்போகும்
சைத்திட்டமாகவேதான்சமதைத்தீயாய்க்
　　கவனமாய்ப்போட்டுவிடுசாமமூன்று
மெய்த்திட்டமாகவேதானனல்தான்மீறி
　　வெடித்துவிடுங்குப்பியதுவீழ்வாய்ப்போமே. (௨௭௮)

* கடிகை-நாழிகை.

போசாமற்பத்திரமாயிருந்துக்கொண்டு
　　பூரணியைமனதில்வைத்துதியானஞ்செய்து
ஏசாமற்சரக்குகளைப்பார்த்துக்கொண்டு
　　என்மக்காள்கவனமதாயிருந்துகொண்டு
சாகாமனின்றதொருதலையுமாகுஞ்
　　சண்ணுமடாசரக்குகளையிந்தபூரம்
வேகாமற்சரக்குகளைவேகவைக்கும்
　　வெகுசுருக்குச்சுண்ணத்துக்காதியாமே. (௨௭௯)
ஆதியாங்குப்பிதனையாறப்போடு
　　அப்பனேயுடைத்துபார்பூரந்தானுஞ்
சோதியாமிளந்தேங்காய்போலதிற்குஞ்
　　சொல்லுவேனிதின்பெருமைசுண்ணத்தாதி
வாதிகளேயிதையெடுத்துவைத்துக்கொண்டு
　　மகத்தானசரக்குகளைச்சுண்ணம்பண்ணு
பாதியாய்நின்றதொரு * மதியைச்சூடும்
　　பரனெனக்குச்சொன்னவித்தைபார்த்தோராமே. ( )

* மதி-சந்திரன்.

குடோரிவைப்பு.

பார்த்துமேசொல்லுகிறேன் * குடோரியொன்று
படிகமாய்வெடியுப்புநாலாங்காச்சத்
சேர்த்துமேவெண்காரம்பூநீற்குதந்
திரமான * வெள்ளையொடுதாளகமுஞ்சாரம்
வார்த்துமேகல்லுப்புவகையொன்றுக்கு
வப்பனேபலமதுதானுலுங்கூட்டி
ஏர்த்துமேகல்லுப்பைவறுத்துப்போடு
இதமானசேர்க்கதிலேகழுஞ்சுகூட்டே. (௨௮௧)

* குடோரி-கொடோரிபாஷாணம்.

* வெள்ளை-சங்குபாஷாணம்.

கூட்டவேவீரமதிற்கழுஞ்சிக்கூட்டிக்
கொட்டிவேயிவையெல்லாங்கலவத்துள்ளே
நாட்டவேயெருக்கன்பாற்றன்னைவிட்டு
நலமாகவரைத்துவிடுசாமம்நாலு
ஆட்டவேவெருக்கனுடபழுப்பின்சாற்றால்
அரைக்கவேநாலுசாமமரைத்தபின்பு
வாட்டவோவிதனிலேயுலரவைத்து
மைந்தனேகாசியென்றமேருக்கேற்றே. (௨௮௨)

ஏற்றவேவாலுகையின்மேலேவைத்து
என்சொல்வேன்றிவையவிடுகமலம்போலே
போற்றியேபன்னிரண்டுசாமமானாற்
பொருந்திநின்றபதமென்றுநெருப்பையாற்றி
மாற்றியேகுப்பிதனையப்பால்வாங்கி
மைந்தனேயுடைத்துப்பார்தேங்காய்போலாம்
ஆற்றியேமஞ்சளுடனோக்கைப்பற்றி
யதிலிருக்குங்குடோரியைநீயெடுத்துவைவே. (௨௮௩)

எடுத்துநின்றகுடோரிதனைவாத்சான்முன்னே
இதமாகவைத்துநீபூசைபண்ணே
தொடுத்தவொருசரக்குகளைக்கரைத்துநீராய்ச்
சோதிபெறச்சத்திபதாய்ச்சவுளையாடு
மடுத்தவொருகுடோரியென்றகாரமாகு
மப்பனேயிதன்பெருமையாருஞ்சொல்வார்
விடுத்தவொருசரக்கிதுதானுருக்கினத்துக்காதி
விபரமிதிற்சொல்லிவைத்தேன்விளம்பக்கேளே. (௨௮௪)

சூடன்வைப்பு.

கேளடா ❊ சூடனுடவைப்புதானுங்
    கீர்த்தியாய்ச்சித்தர்சொல்லவேயான்
நாளடாவாழையைத்தான்வெட்டிப்போட்டு
    நலமாகக்கிழங்குதனைக்குடைந்துவைத்தாற்
சாளடாமறுநாட்டானூற்றுப்பாரு
    சலமதுதான்னிரம்பிநிற்குமெடுத்துக்கொண்டு
வாளடாபடிதானுப்பிருபதாகு
    மைந்தனேயெடுத்துநீபாண்டத்தூத்தே. (௨௮௫)

❊ சூடன்-கருப்பூரம்.

ஊத்தடாசெப்பினுடபாண்டந்தன்னி
    லுத்தமனேவெடியுப்புஐந்தாங்காச்சல்
சேத்தடாவுப்பதுநான்முதிக்கக்கேளுந்
    திறமையாயுப்புத்தான்பாண்டத்திட்டு
வாத்தடாகாடியதுயமுங்கவிட்டு
    மைந்தனேகுங்கிலியம்பத்துக்கொன்று
பாத்தடாவெள்ளையாயெடுத்துக்கொண்டு
    பக்குவமாயுருக்கியதிலிட்டிடாயே. (௨௮௬)

இட்டுமேயடுப்பிலிட்டுக்காய்ச்சும்போது
    இதமாகக்குழம்பதுபோற்பதத்தைப்பார்த்து
தொட்டுமேயெலுமிச்சம்பழத்தின்சார்
    சுருக்கிடவேகுத்திநீகாய்ச்சும்போது
கட்டுமேயுலையதனிற்சுருதிப்பாரு
    கனக்கவேயுறைந்துவிடும்பதமென்றேதாம்
போட்டுமேபுதுச்சட்டிதன்னிலேதான்
    புகழ்பெறவேயூற்றிவிடுயுப்புநீரோ. (௨௮௭)

நீரிட்டசட்டியைத்தான்மூடிப்போடு
    நிறைத்துமேமூன்றுநாளானபின்பு
காரிட்டவுப்பதுதானென்னசொல்வேன்
    கம்பியென்றால்பெருங்கம்பியாகும்பாரு
சீரிட்டவுப்பதனைக்காயப்போடு
    தீர்க்கமாயெட்டுசேர்நிறுத்துக்கொண்டு
வாரிட்டவாழையுடஜலத்திலேதான்
    மைந்தனேகலக்கிவிடுவகையிதாமே. (௨௮௮)

வகையானதொன்றுமில்லைபாண்டந்தன்னை
    மைந்தனேயடுப்பில்வைத்துகாய்ச்சும்போது

இகையானகருவாப்பட்டைதன்னை
யிதமாகத்தானெடுப்பாய்விசையொன்று
துகையானவிதையிடித்துப்பாண்டத்திட்டு
துப்பறவாய்க்காடியது துணியிட்டு
பகையில்லாவெல்லமடாபணையின்வெல்லம்
பாங்குடனேசேரிரண்டுபோர்த்துப்போடே (உஅரு)

போட்டுமேகலக்கிநீயூரப்போடு
போக்கோடேமத்தைவிட்டுக்கிண்டும்போது
ஊட்டுமேகையிடையிற்சிறிதானால்
உத்தமனேமறுபாண்டந்தன்னிலூற்றி
காட்டுமேயடுப்பிலிட்டுப்பாலைமூடி
கவிழ்த்தியேகுழையிலிட்டுவாங்குவாங்கு
நீட்டுமேதிராவகம்போலிறங்கும்பாரு
திறமானபீங்கானிற்பதனம்பண்ணே (உகூ0)

பண்ணவேமுன்னுரைத்தவாழைநீர்தான்
பற்றியேவருகையிலேதிராவகத்தைவாரு
எண்ணவேபடிரண்டுகூடவாரு
யிதமாகக்கிண்டியேமூடிப்போடு
கண்ணவேகாற்றில்லாவிடத்திலேதான்
கனமதாய்மூடியடாசொல்லக்கேளு
வண்ணவேயொன்பதுநாட்சுழிந்ததானால்
வாங்குவெறத்திறந்துபார்சூடனாமே. (உகூக)

ஆருமேயாலாத்திப்பூரமாச்சு
அப்பனேபதைக்கட்டவாராலாகும்
போகுமேசுண்ணமென்றகட்டுக்கெல்லாம்
போக்கோடேபாலாயுப்புபண்ணினுக்கால்
ஏகுமேதலையென்றுமிதற்குப்பேரு
எண்ணமென்றுந்தீயென்றுமிதற்குப்பேரு
தாகுமேயக்கினியாங்கூர்மமாச்சு
சச்சிதானந்தவெளிதானேபாரோ (உகூஉ)

அஞ்சனபாஷாணவைப்பு.

தானென்றவஞ்சனமாம்பாஷாணத்தைச்
சாற்றுவேன்வகைவிபரமாக்கசேளு
ஊனென்றாசமதுதான்பலமுமெட்டு
உத்தமனேசந்தியதுபலமிரண்டு

வானென்றகெந்தகத்தையோட்டிவிட்டு
மைந்தனேவுருகையிலேரசத்தைக்கொட்டித்
தேனென்றகுச்சியினாற்கிண்டும்போது
சிவந்துமேகரியாகவிருக்கும்பாரே. (௨௯௩)

பாரேநீரசத்துளைக்கல்வத்திட்டு
பருங்கம்பிவெடியுப்புப்பலமிரண்டு
காரேநீதாளமுகம்பலமுமொன்று
கருவானவாள்காட்டிமுட்டைநீரால்
வாரேநீகல்வமதிற்றிரட்டிக்கொண்டு
மைந்தனேரவியில்வைத்துப்பொடியாய்ச்செய்து
ஆரேநீவயத்தாற்குப்பிதானும்
அப்பனேலேசாயடித்திடாயே. (௨௯௪)

அடித்துமேயொருசிலைமெதுவாய்ச்செய்து
அதனிலேரசத்துளைக்கொட்டுவாநீ
பிடித்துமேதாளியிலேமணலையிட்டுப்
பேசாதேகுப்பிவைத்துவாயைமூடி
துடித்துமேதிரியாதேகமலத்தியாய்த்
தோணவேபனிரண்டுசாமந்தானுங்
கடித்ததேளேற்வதுபோலேதானுங்
கட்டுமடாலேசாகப்பதங்கமாமே. (௨௯௫)

ஆகுமேகுப்பியைத்தானப்பால்வாங்கி
அதுதனக்குநீர்தெளித்தாறப்போட்டு
போகுமேகுப்பியைநீயுடைத்துப்பாரு
பொன்போலேபதங்கமதுமேறிநிற்குந்
தாகுமேயிதன்பெருமைசொல்லக்கேள்நீ
சார்வானவஞ்சனபாஷாணந்தான்
வகுமேபாண்டமதுயிருப்புத்தொட்டி
யிதனடியில்நின்றதுரத்தம்பாரே. (௨௯௬)

சிங்கிவைப்பு.

பாரேநீயின்னமொருதொழிலைக்கேளு
பாங்கானசிங்கியுடவைப்புதன்னை
சேரோநீகாரியஞ்சொல்லக்கேளு
திறமையாய்ப்பலமதுதானிருபதாகும்

நேரேநீகந்தகந்தான்பலமூமஞ்சு
    நேரானவெடியுப்புரண்டரைப்பலந்தான்
வாரேநீதாளசமும்பலமிரண்டு
    மைந்தனேவிதுவெல்லாம்பொடியாய்ப்பண்ணே. ()

பண்ணியேயியமதைபோட்டிலிட்டுப்
    பக்குவமாயடுப்பினில்வைக்கும்போது
கண்ணவேபொடிகளைநீதூவித்தூவிக்
    கருகவேகருக்கிவிடியஞ்சாக
எண்ணவேயிவையெடுத்துக்கல்வத்திட்டு
    விதமாகப்பொடிபண்ணிதோண்டிலிட்டு
சொன்னதொருமேல்மூடிச்சீலைசெய்து
    துடியாகவாலுகையில்வைத்திடாயே. (உகூ௮)

வைத்துமேபனிரண்டுசாமந்திலை
    மைந்தனேகமலம்போலெரிநேர்பாகம்
பொய்த்துமேபோகாதுயப்பால்வாங்கி
    பூரிப்பாய்ச்சலமதனைத்தெளித்தேயாற்றி
அப்த்துமேபோகாதேயுடைத்துப்பாரு
    அப்பனேசிறுகம்பிபோலேநிற்கும்
நைத்துமேதானெடுப்பாய்மஞ்சள்வன்னம்
    நாதாக்கண்மகிமையிதிலாட்டுர்தானே. (உகூகூ)

ஆட்டானசிங்கிபைத்தான்மெழுகுபண்ணு
    அப்பனேசுண்ணமதுவாசச்செய்நீ
பாட்டானதொன்றுமில்லைசிங்கிப்போக்கு
    பாரிக்கும்வெகுகோடிதொழில்களாகுந்
தேட்டானதொன்றுமில்லைசிங்கிவிட்டால்
    சிவசிவாரசந்தனக்குவழியுமாகும்
மூட்டானதொன்றுமில்லையென்தாய்பூசை
    முதன்மையாய்ச்செலுத்திடவேசித்தியாமே. (௩௱)

கற்பம்.

சித்திக்குமின்னமொருதொழிலைக்கேளு
    திறம்பெறவேசொல்லுகிறேன்கற்பந்தன்னை
முர்திக்குஞ்செங்கடுக்காய்கொண்டுவந்து
    முறைமைபெறச்சிறுநீரிலூறப்போட்டு
சுத்திக்குமிதுநல்லதாகுமாகுந்
    தூள்பண்ணிக்கலசமதிலடைத்துக்கொண்டு

பத்திக்கும் * வெருகடிகான் வெந்நீரிற்கொள்ளு
பருவமுடன் மண்டலங்கொண்டுதேறே. (௩௱௧)

* வெருகடி-பூனையடிவதே மூவிரற்பிரமாணம்.

கொண்டுமேயானபின்புசொல்லக்கேளு
கூறுவேன் மிளகுதனைப்பெரிதாய்ப்பார்த்து
தண்டுமேரவிநீரிலூறப்போட்டுத்
தாக்கடாமிளகுதனையஞ்சதாகம்
உண்டுமேதினந்தோறுமிந்தபாகம்
உத்தமனேயிருபதுநாளூறுமாகும்
பண்டுமேயைந்தாகக்குளைத்துவாநீ
பக்குவமாய்ச்சொல்லுகிறேனின்னங்கேளே. (௩௱௨)

கேளடாமிளகுதுதான்கொள்ளும்போது
இருமைபெற * வமுரியுடன்சேர்த்துக்கொண்டு
கோளடாவாராமலமுரிதன்னைக்
குறிப்பாகத்தேத்தானின்வித்தையிட்டு
பாளடாபோகாமலுப்புச்சுண்ணம்
பரிவாசவிராகனிடைகூட்டிப்போட்டு
வாளடாதேய்த்துவிடுதெளிந்துபோகு
மைந்தனேகற்பத்துக்குறுதியாமே. (௩௱௩)

* அமுரி-மூத்திரம்.

உருதியாயிப்படியேசெய்துகொண்டு
உத்தமனேகொண்டுவாநீகாலைநேரம்
பருதியாய்மாலையிலேசூரணந்தானுண்ணு
பக்குவமாய்ச்சொல்லுகிறேன்பாகங்கேளு
கருதியாய் * கரிசாலைக்குப்பைமேனி
கனசெருப்படைவிடத்தலையின்வேரும்
அருதியாய்பொற்கொன்றை * காந்தையோடு
அப்பனேதூதுவளையாகுமென்னே. (௩௱௪)

* கரிச்சாலை-கரசலாங்கண்ணி

* காந்தை-முதற்குறைசிவகாந்தை.

எண்ணவேவல்லாரையங்சொல்வித்து
இதமானசாதிக்காய்பத்திரியுங்கிராம்பு
சொன்னதொருசரக்கெல்லாமுலரவைத்துச்
சொற்பெரியமந்தாரைவெள்ளைப்பூவும்
அன்னமேமல்லிகைப்பூநிலப்பனையின்கிழங்கு
அப்பனேவகையொன்றுபலமொன்றாகப்

பண்ணவேசூரணமாய்ச்செய்துகொண்டு
பாலகனேயெட்டிலொன்றுகற்கண்டைக்கூட்டே. ()

கூட்டியேவெருகடிதானெடுத்துக்கொண்டு
குலமானமுட்பன்றிநெய்யதனால்
ஆட்டியேகொண்டுவிடுமண்டலந்தானென்று
அப்பனேமாலையென்றநேரந்தன்னில்
நீட்டியேகாலையின்பிளருகற்பம்
நினைவாகக்கொண்டுவரப்பருவஞ்சொன்னேன்
வாட்டியேதேகத்திலுள்ளநீரா
வாங்கியேயிறக்கிவிடுமைந்தாபாரே. (௫௱௬)

டாரோநீவாதபித்தம்பிரிந்துபோகும்
பார்க்கையிலேபித்தமதுபறந்துபோகும்
காரோநீசிரசினின்றகபத்தைச்சாடுங்
கனமானகோழையதுகழன்றுபோகும்
வாரோநீயமுர்தமதுபெருகியூறும்
மைந்தனேநரம்பெல்லாமிறுகும்பாரு
சேரோநீவித்துவதுமணிபோலாகும்
திறமையாய்மாயத்திற்சிக்கொண்ணாதே. (௫௱௭)

சிக்காமலப்புறத்தில்நின்றகொண்டு
தினந்தோறும்வாசியுடதாரணையைப்பாரு
தாக்காமல்போகுமடாபிரபஞ்சந்தான்
தன்மையாய்ச்சொல்லிவைத்தேனிந்தநூலிற்
பார்க்காமற்கேட்டார்களுலகத்தோர்கட்
பாழானமனதையெங்குமலையொட்டாதே
சேர்க்காமல்சேர்க்குமடாசித்தரோடே
சென்றபின்புசித்தவொன்றபெருமாமே. (௫௱௮)

பேரானரோமனுடபிள்ளையென்று
பெருமைபெற்றுக்கொண்டுநீவந்தாயானாற்
கூராகுமெந்தனுக்குக்கீர்த்தியுண்டு
கூப்பிடுவேனுன்னையுந்தான்பிள்ளையென்று
ஆராகுஞ்சித்தருடநூலைப்பார்த்து
அங்கங்கேதேறுவதுயருமைமெத்த
சீராகுமென்னாலோகுருவுமாகுஞ்
சித்தருக்குமெத்தொழிலுந்திறமாய்த்தானே. (௫௱௯)

உருத்திரகற்பம்.

திறமானகற்பமொன்றுசொல்லக்கேளு
சிவசிவாருத்திரனென்றகற்பமாகும்
முறமானசீந்தியடாபெரிதாய்ப்பாரு
மோகோகோவேவாயுநீயுள்ளேதோண்டி
நிறமானவோராண்டுமட்டுமானால்
நேரானகணேசனைப்போற்கிழங்குதோன்றுஞ்
சலமானவாசியைநீயுள்ளேபூட்டித்
தம்பித்தேவாலயைநீதியானம்பண்ணே. (௫௱௰)

பண்ணவேயென்தாயார்கிருபையாலே
பதனமாய்க்கிழங்குதனையெடுத்துக்கொண்டு
உண்ணவேமேற்றோலைச்சீவிப்போட்டு
வுறுதிபெறப்பாக்கதுபோற்றுண்டுபண்ணி
நண்ணவேநிழலுலர்த்தாலுலர்த்திக்கொண்டு
இடித்துமேதூளாக்கியப்பாற்கேளு
சண்ணவேயெட்டிலொன்று ※ சீனிதானுஞ்
சரிகூட்டிரோகித்துயப்பால்வையே. (௫௱௰௧)

※ சீனி-சருக்கரை.

வையென்றகூரணத்தையந்திசந்தி
மைந்தனேகொண்டுவரவிபரங்கேளு
பொய்யென்றுபோகாதேசிந்திற்றண்டை
போக்கோடேமேற்றோலையப்பால்வாங்கி
நையென்றுதட்டியேபலமுமொன்று
நாட்டடாபடிநீருமளந்துவிட்டு
மெய்யென்றுமனதில்வைத்துத்தியானஞ்செய்து
விரவியேயெட்டொன்றுய்க்காய்ச்சிடாயே. (௫௱௰௨)

காச்சியதோர்கியாழத்திற்சூரணத்தோடொக்க
கருதியேகொண்டுவரமண்டலந்தானப்பா
பாச்சியதோர்நரைதிரைகளெல்லாம்போகும்
பக்குவமாய்க்காயசித்திக்கிதுவேயாகுந்
தாச்சியில்லைபொருளைக்கண்டாயானால்
சாவில்லையுந்தனுக்குத்தாழ்வராது
வாச்சியெனுமென்தாயார்கிருபையாலே
வருணமீறும்பொருண்மீறுமறிந்துபாரே. (௫௱௰௫)

சதுரக்கள்ளிக்கற்பம்.

பார்க்கவேசித்திக்குஞ்சாவோயில்லை
பரிபாஷைக்கருவாகச்சொன்னார்பாரு

ஏர்க்கவேயிந்தமுறைகற்பந்தன்னை
    யிணக்கமாச்சொல்லிவைத்தானிடையில்லாமற்
சேர்க்கவேகற்பத்தையுண்டபின்பு
    திறமானகற்பமொன்றுசொல்லக்கேளு
தீர்க்கமாமன்மதனைக்காட்டிற்றாளுல்
    திறமானசதுரமாங்கள்ளிக்காயே. (௩௱௰௪)

காயானதொன்றுமேபலமொன்றக்குக்
    கைத்தாழஞ்சோறுமாகுஞ்சலமூன்றுந்
தாயானகடுக்காய்தான்பலமுமொன்று
    தப்பாமல்விளாப்போக்கிப்பொடித்துக்கொண்டு
சேயானகையதனுற்பிசைந்துகொண்டு
    திறமையாய்வடிகட்டிச்சலத்தைவாங்கி
மேயான ※ யேரண்டத்தெண்ணெய்தானு
    மிருகழஞ்சுவிட்டதிலேயிதமாய்க்கொள்ளே. (௩௱௰௫)

※ ஏரண்டம்-ஆமணக்கு.

கொள்ளவேமலமொதுங்கத்தள்ளிப்போடுங்
    கொடுமையென்ற ※ வழலையெல்லாங்சக்கும்பாரு
மெள்ளவேபால்கஞ்சிவைத்துக்கொள்ளு
    மேல்நின்றபித்தமெல்லாங்கீழேசாடுங்
கள்ளமொன்றுவாராதுமலங்கடன்னை
    கண்டிப்பாய்க்கழண்டுவிடுங்கருத்தான்சொன்னேன்
பள்ளமென்றபடுகுழியில்வீழ்ந்தாயானுற்
    பயனறியக்கர்மமதுகொல்லும்பாரே. (௩௱௰௬)

※ வழலை-உப்பு.

பாரப்பாகற்பவிதிசட்டைநாதர்
    பாடியதோர்சாஸ்திரந்தான்மெத்தநன்று
தேரப்பாவன்னூலுமின்னூலும்பார்
    திரமாகுங்கற்பவிதியுறுதிமெத்த
ஆரப்பாயெங்களைப்போற்சொல்வாரில்லை
    அவரவர்களனேக்வித்தையாகச்சொன்னார்
காரப்பாகற்பங்கட்காணமாட்டார்
    கருத்துவைத்துயின்னூலைப்பாருபாரே. (௩௱௰௭)

பார்க்கவேபத்தியத்தைச்சொல்லக்கேளு
    பருவமுடன்புகையாகாபுளியுமாகா
ஏர்க்கைகயிலேயுப்பாகாயெண்ணெயாகா
    யிதமானபெண்ணேடுசுண்ணும்பாகா

சேர்க்கையிலேமோராகா துவற்புமாகா
தீர்க்கமாய்க்கடுகாகா * வுள்ளியாகா
தார்க்கையிலேதீத்திரையும்சோயமாகா
தனிநாட்டகுறிதனிலேசார்ந்துநில்லே. (௲௰௮)

* உள்ளி-வெள்ளைப்பூண்டு.

நில்லென்றாலொருமனதாய்நிற்கவேணும்
நிலையானமவுனத்தைக்காணவேணும்
வெல்லென்றான்மனதறிவைவெல்லவேணும்
வேதாந்தசாஸ்திரத்தைக்காணவேணும்
கல்லென்றால்ஞானவிதிகற்கவேணும்
கன்மமென்றபாசத்தைத்தள்ளவேணும்
இல்லென்றால்வையத்தைதோய்ந்துபோகும்
இதுதனக்குவிலைசவருமோவிண்ணுள்ளோர்க்கே. ()

உள்ளபடிசொல்லுகிறேன்கற்பத்துக்கு
உறுதிபெறப்பத்தியத்தைச்சொல்லக்கேளு
கள்ளமொன்றும்வாராதுபசுவினெய்யாங்
கருதியதோர்பாலாகுந்தேனுமாகும்
விள்ளவேசிறுபயறுமுருங்கையாகும்
வெள்ளையென்றவழுதலங்காயிலைகளாகுங்
கொள்ளவேதூதுளையிலையுமாகுங்
கூட்டுவாய்நெல்லிக்காயவரைக்காயே. (௲௨௰)

சாயானபீர்க்கங்காய்பொன்னாங்கண்ணி
கருவாடுசிறுகீரைகஞ்சாவாகுந்
தாயானவெள்ளாடுகாடையாகுஞ்
சாற்றுவேன்வல்லாரைமுயலுமாகும்
பாயானமானாகும்மறையுமாகும்
பக்குவமாப்பனைவெல்லவஸ்துவாகுஞ்
சேயானபிள்ளைகளாயுங்களுக்குத்
தீர்க்கமாய்ச்சொல்லிவைத்தேன்றிறமாய்த்தானே. ()

திறமானபத்தியத்துக்கமுதுகேளு
தீர்க்கமாய்க்கருங்குருவைநெல்லுக்குத்தி
உறமானவரிசியதுவரியில்லாமல்
உத்தமனேதிட்டியதைவைத்துக்கொண்டு
திறமானகையதனால்சேறுவாங்கி
தீர்க்கமாய்ச்சமைத்துநீயொருபோதுண்ணும்

பரமானபராபரத்தைப்பூசைசெய்து
பாங்காகவொருபோது வெந்நீர்கொள்ளே. (கூஉஉ)

கொள்ளவேபழமாகுஞ்சினியாகுங்
கூறுவேனிப்படிநீபத்தியத்தையுண்டு
விள்ளவேவேண்டாங்கா ணூர்க்காணலும்
வேதாந்தவாலையைநீதித்தம்பூசி
வள்ளவேஞானமென்றவமூர்தந்தன்னை
வாகாசபரவெளியிலமர்ந்துநில்லு
தள்ளவேவேணுமடாலோகவாழ்க்கை
சச்சுதாநந்தவெளிதன்னினில்லே. (கூஉகூ)

தன்னிலையைத்தானறிந்துபார்க்கவேணுஞ்
சதாநித்தியங்குருபதத்திற்சாரவேணுங்
கண்ணிலேமனக்கண்ணேபார்க்கவேணுங்
கவனத்தாற்கெவுனமதிற்செல்லவேணும்
மென்னிலையைநீயறிந்துவருகவேணு
மென்குருவாம்புசுண்டருடகிருபைவேணும்
முன்னிலக்குக்கற்பமறிந்துண்ணவேணு
மூர்க்கமுடன்கோபத்தைத்தள்ளுதள்ளே. (கூஉச)

மூதண்டக்கியாழம்.

தள்ளடாகற்பம துண்ணும்போது
சரீரத்தில்வெட்டையதுமீறிற்றானுகில்
கொள்ளடா * மூதண்டகியாழந்தன்னை
கூறுவோமறுகன்வேர்பிடிதானென்று
விள்ளடாமிளகதுதானிருபத்தஞ்சு
விசிதமாய்ப்படிசலத்திற்கூடப்போட்டு
தள்ளடாகியாழமதாழாக்காணுக்கால்
தயவாகவெண்ணெயிட்டுக்கொண்டாடியே. (கூஉரு)

* மூதண்டகியாழம்-அறுகுவேர்க்கியாழம்.

தலைமுழுகத்தைலம்.

கொண்டுவிடுபாக்களவுவெண்ணெயிட்டுக்
குடிலமென்றகுதிப்பெல்லாமடங்கிப்போகுங்
கண்டுகொள்ளுந்தலைமுழுகவரிசைகேளு
கனமானமிளகுடனேகடுக்காய்நெல்லி

உண்டுசொள்ளுசாதிக்காய்மஞ்சள்வேம்பு
வுத்தமனேபருப்புடனேமஞ்சள்கூட்டி
பண்டுகொள்ளுவாவின்பாற் றன்னாலாட்டி
பக்குவமாய்க்காய்ச்சியதைமுழுகுவாயே. (௫௨௬)

முழுகவே * பட்சமதுதனக்குநீயு
முறைமையுடன்வாரமதில்நெய்யுமூழ்கு
தமுகவேமாதரிடஞ்செல்லவேண்டாஞ்
சண்ணுமடாமாய்கையைநீதள்ளுதள்ளு
நமுகவேமாயத்திற்சென்றாயானால்
நன்றாகச்சண்ணுமடாமருந்துதானுங்
கழுகவேமனக்கசடுசுத்தியாகுங்
கன்மவினைதனைப்போக்குங்கண்டுகொள்ளே. (௫௨௭)

* பட்சம் - பதினைந்துநாள்.

கண்டுகொள்ளுமிப்படிநீ காயசித்தி
கருத்தில்வைத்துமனம்பிறக்கச்செய்தாயானால்
உண்டுகொண்டமூர்த்தமதையிருக்கலாகு
மொருவருஷமொருநாட்போலுனக்குத்தோணும்
பண்டுசெய்தபாழ்வினைகளெல்லாம்போகும்
பரமகுருபாதமதைக்காணலாகுந்
திண்டுமுண்டுசெய்யாதேமகனேநீயுஞ்
சிறப்பாகபதமதிலே சேர்ந்துநில்லே. (௫௨௮)

நில்லென்றான்மனக்குரங்குநிற்கொட்டாது
நினைவடங்கிமவுனத்தைத்தியானஞ்செய்நீ
கல்லென்றாற்கனாயுமடா யெந்தனாலுங்
கருத்தறிந்துபாருநீ கருவுந்தோணுஞ்
சொல்லென்றாற்கோடிக்கொன்றேயாகுஞ்
சொன்னாலுந்தெரியாவிட்டாலென்னசெய்வேன்
கொல்லென்றாற்பிரபஞ்சமுன்னைக்கொல்லுங்
கூடுதற்குமவுனத்தைக்கூறுவேனே. (௫௨௯)

கூறுவேன்மவுனமென்றஞானந்தன்னைக்
கூறினதாற்சித்தரென்னாலொளித்தார்பாரு
சாறுவேன்மவுனத்தை சிக்கில்லாமற்
றானிருந்தண்டமதின் மனதைப்பூணுங்
காறுவேன்கண்பரியாமூலத்துள்ளே
கண்டுபாரசாரவடியணுவேயாகுஞ்
சேறுவேனென்றுசொல்லியகாரமேலே
செழுங்கமலவுச்சியிலேசேர்ந்துநில்லே. (௫௩௰)

நீர்க்கையிலேமகாரமதுவன்னூந்துகாணும்
நினைவையதிலோட்டையிலேதின்மயமாய்ப்போச்சு
சேர்க்கையிலேதிரோதாயின்மாய்கைபோச்சு
செனனமதுசாவில்லையுறுதியாச்சு
பார்க்கையிலேயொன்றுமில்லைபிரபஞ்சந்தான்
பரவெளியிலுன்மனதைப்பதியவைத்து
சார்க்கையிலேமகாரமென்றவெழுத்தைநீயுஞ்
கட்டாகவுச்சிநடுமையந்தானே (ருகக)

தானென்றஞானமதுகோடியுண்டு
சமுசியங்கடீராதுசார்வுங்காணூர்
ஊனொன்றஞானங்களொன்றுமில்லை
யொளித்தார்கட்சித்தரெல்லாம்பேசிக்கொண்டு
தேனென்றவமுர்தமென்னுவிந்துவிந்து
தின்றவனேசிவயோகிசித்தன்ஞானி
வானென்றமனதையல்லோவமுர்தத்துள்ளே
வாக்கினால்சிவயோகிசித்தனாமே. (ருகஉ)

சித்தனென்றுபேர்படைத்தென்னால்கட்பாரு
சிவசிவாஞானவெளிதிறவுகோலார்
பத்தனென்றுலுயிர்காத்தோனவனேயோகி
பாராமல்தின்றவனேபோகியாகும்
முத்தமென்றுபேர்படைத்துநின்றோனுசான்
மூர்க்கமுள்ளகோபத்தைகடந்தோன்யோகி
வத்தமென்றவாழ்வுதனைக்கடந்தோன்ஞானி
வானகத்தின்பொருடனையறிவிப்போமே. (ருகங)

மவுனபெருமை.

அறிவிப்பேன்வானகத்தின்வெளியிற்குள்ளே
யரனிருக்குமிடமாகுமறிந்துபாரு
தெரிவிப்பேன்வகாரமென்றவெழுத்தைநீயுந்
திறமாகச்சங்கிலிபோன்மாட்டிக்கொண்டு
நெருவிப்பேனென்றுசொல்லிமனத்தைப்பூட்டு
நேருபடும்பரவெளியும்நிமஷத்துள்ளே
தருவிப்பேன்வமுர்தத்தைமகாரம்வைத்துச்
சங்கிலியின்வழியிழுக்கத்தருகும்பாரே. (ருகச)

தருகுமேஞானமென்றவழிக்குமப்பா
சார்வானமனமொன்றேஞானம்ஞான

முருகுமேமனக்குரங்கைவெளிவிடாம
    லூட்டடா அகார நுணிவுச்சிமீதிற்
பெருகுமேயமுர்தமதுயென்னசொல்வேன்
    பிரளுமடாகனாசடந்துவெள்ளம்போலே
வருகுமேயோசமுதன்மவுனஞான
    மனம்விட்டாலொன்றுமதுவந்திடாதே. (௫௫௫)

வந்திடாதென்றுசொல்லிப்பலவிதத்தான்
    மாட்டினார்சாத்திரங்களனேகங்கோடி
முந்திடாதென்றுசொல்லிசொன்னதெல்லாம்
    மோசமடாமனதுறுதியாகுமென்றுஞ்
சிந்திடாதென்றுசொல்லியமுர்தங்கொண்டாற்
    நீக்கமடாமனமதுவேகுருவேயாகும்
வெந்திடாதிட்டமல்லோமவுனமாகும்
    வெருளாமலோரிடத்தில்நின்றால்சித்தே. (௫௫௬)

சித்தானமனந்தன்னைச்சித்திசெய்ய
    தீர்க்கமாய்ச்சொல்லுகிறேனின்னங்கேளு
வித்தானமனமதனையறிவினாலே
    விசிதமாய்பிடித்திழுத்துயகாரத்துள்ளே
மூத்தானமகாரமென்றசங்கிலியினாலே
    மூட்டோடேவரிந்துகட்டி அகாரத்துள்ளே
சுத்தானநடுமையங்கட்டிவைக்க
    சுருதிமுடிஞானமென்றுசொல்லலாமே. (௫௫௭)

சொல்லிவிட்டேன்ஞானமெல்லாமவுனத்தாலே
    சொற்பெரியவறிவுக்கவிடதமாகும்
வல்லியெனுந் * திரோதாயின்மாயிகைபோச்சு
    மயக்கமென்றவறிவெல்லாமாண்டுபோச்சு
கொல்லிமலைதனிலேறியென்னசெய்ய
    குடிகெடுத்தயாசமதுவந்துகூடுஞ்
சல்லியமென்றெண்ணாதேஞானந்தன்னைச்
    சார்ந்தாக்காலுந்தனுக்குச்சாவுபோச்சே. (௫௫௮)

* திரோதாயி-பஞ்சசத்தியிலொன்று.

பூரணலேகியம்.

போச்சென்றுசொல்லிவைத்தேனின்னங்கேளு
    போக்கோடேபூரணத்தின்லேகியந்தான்மைந்தா
போச்சென்றசடைக்கஞ்சாகொண்டுவந்து
    பிசைந்தெடுத்துகுச்சிவிரைதன்னைப்போக்கி

ஆச்சென்றுதிருநீற்றின்பச்சைதன்னை
யப்பனேகொண்டுவந்துசாறுவாங்கி
நீச்சென்றவதைத்துலைவத்துகாயப்போடு
நீதிபெறசூரணமாய்ச்செய்துகொள்ளே. (௩௩௯)

கொள்ளவேசூரணத்தையப்பால்வைத்து
கூறுவேன்பாலிதுக்கின்னக்கேளு
விள்ளவேயாவின்பால்வெள்ளாட்டுப்பால்
விதமானபுங்கம்பால்பனம்பாலோடு
மெள்ளவேதேங்காய்ப்பாலத்திப்பாலும்
மேன்மையாய்வல்லாரைசீந்திற்போடு
தெள்ளவேவகையாஞ்சார்வகையொன்றுக்கு
தீர்க்கமாய்படியனாதான்விதஞ்சேரே. (௩௪௰)

சேர்க்கவேசொல்லுகிறேனிவையெல்லாந்தான்
திறமைபெறத்தாளிதனிலொன்றாய்விட்டு
பார்க்கவேசினியதுபலந்தான்பத்து
பக்குவமாய்ப்பனவெல்லம்பலமுமஞ்சு
கார்க்கவேயடுப்பில்வைத்துபாகாய்க்காய்ச்சி
கடைசரக்கைச்சொல்லுகிறேன்கருவாய்க்கேளு
ஏர்க்கவே * திரிகடுகுதாணிக்காயு
மினியதொருகடுக்காயுங்கிராம்புமாமே. (௩௪௧)

* திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி.

ஆகுமேஅதிமதுரங்கர்ப்பூரந்தானு
மக்கிராகாரமுடன் * கருவாப்பட்டை
போகுமேசாதிக்காய்சிறுநாகப்பூ
போஸ்தக்காய்பத்திரியும்பொருந்தக்கூட்டி
வாகுபெறவேலமுடன்வெட்டிவேரு
மல்லியொடுமுந்திரிகையபின்வெண்காரம்
ஏகுமேசீரகமும்விலாமிச்சோடு
யிவையெல்லாந்தானெடுத்தின்னங்கேளே. (௩௪௨)

* கருவாப்பட்டை-சன்னலவுங்கப்பட்டை.

கேளடாமாசிக்காய்பெருதமோடு
கிருபையொடுசொல்லுகிறேன்வகையொன்றுக்கு
கோளடாவராமதற்பலங்கால்விதம்
கொண்டுவந்துசூரணமாய்செய்துகொண்டு
வாளடாபாகதிலேபோட்டுக்கிண்டி
மைந்தனேபடியனாதான்தேனும்விட்டு

சூவடாயாவினைப்படிதான்விட்டு
சூட்டுவேனின்னமுந்தான்சொல்லுவேனே. (௫௪௩)

சொல்லுவேன் * பூநாகம்பலந்தானென்று
சொற்பெரிய * விந்திரமாங்கோபப்பூச்சி
வெல்லுவேன்வகையொன்றுபலமூன்றாக
விருதுபெற்றமுலைப்பாலிலரைத்துப்போட்டு
சொல்லுவேன்மங்கையுடநாதம்வாங்கி
தீர்க்கமாய்ச்சொல்லுகிறேன்திறமதாக
வல்லவனுநீயானால்சொல்லக்கேளு
மங்கையரைவிலகுநாட்டன்னைப்பாரே. (௫௪௪)

*இந்திரகோபப்பூச்சி-தம்பலப்பூச்சி *பூநாகம்-நாக்குப்பூச்சி.

பாரப்பாவவளுடனேபோகஞ்செய்து
பரிவானவிந்துநாதம்வாங்கி
சேரப்பாநாலுநாள்சையோகித்து
தினந்தோறும்பீங்கானில்வாங்கிவைத்து
ஆரப்பா * பூரமதைபொடைத்துப்போட்டு
அப்பனேபனியில்வைக்கசலமுமாகும்
கூறப்பாயச்சலத்தையிறுத்துநீயுங்
கொட்டுவாய் * மாகாணிபடியுமாமே. (௫௪௫)

* பூரம்-ரசகர்ப்பூரம்- * மாகாணி-பதினாறிலொருபங்கு.

படியானசெயநீரையதிலேவார்த்து
பக்குவமாய்க்கிண்டிவீடுமெழுகுபோல
துடியானபதம்பார்த்திரக்கிக்கொண்டு
சொல்லுவேன்பீங்கானிற்பதனம்பண்ணி
வடிவானவென்தாயார்பதத்திற்றானே
வைத்துநீபூசைபண்ணியெடுத்துக்கொண்டு
விடியானகழஞ்சுநிறைகொண்டாயாகில்
வெல்லுமென்றுயோகத்தைமுடிக்கலாமே. (௫௪௬)

முடிக்கவேகபத்தையெல்லாமறுத்துச்சாடும்
மூதண்டரவிமதியுங்காட்டிவைக்கும்
நடிக்கவேபித்தத்தைக்கீழேநோக்குந்
தாதுகளையுண்டாக்குஞ்சார்வுகாட்டும்
முடித்ததொருலேகியத்தைமண்டலமேகொள்ளு
முன்சொன்னவகைகளெல்லாந்திரந்துகாட்டும்
பிடிக்கவேவேணுமடாயகாரவீட்டை
பேசாதேலேகியத்தின்றிறமிதாமே. (௫௪௭)

ஆமென்றலேகியத்தையுண்டபோது
அப்பனேகண்கள்ரண்டுஞ்சிவந்துகாணும்
மூமென்றமன்மதன்பொற்காந்தியாகு
முத்தமமனேலேகியமோவுறுதிமெத்த
பாமென்றசூரியனிலோட்டங்காணும்
பரவெளியிற்றிருநடனங்காணலாகுந்
தேமென்றமொழியாளைகூட்டெண்ணாது
சிறக்கவேபத்தியந்தான்றிறமாய்க்காரே. (௫௪௮)

காக்கவேபத்தியந்தான்தவறினுக்காற்
கண்கேடுமதிகேடுங்காயம்பாழாம்
வர்க்கவேகாயமதழிந்துவிட்டா
லென்னசொல்வேன்காயமதுகாணலாமோ.
பார்க்கவேயெந்தனுட நூலைப்பார்த்து
பாழாகப்போனுக்காலெனக்குகோஞ்சகு
சேர்க்கவேமனமதுதான்சொல்லாவிட்டாற்
றீர்க்கமாயென்னூலைப்பார்கொண்ணாதே. (௫௪௯)

ரோமரிஷிதெரிசனம்.

ஒண்ணாகயிற்நூலைப் பார்த்தாயானால்
உறுதிபெறவெந்தனைப்போலாகவேணுங்
கண்ணானகண்ணாகுமெந்தனுக்கு
கருதுவேன்சித்தருடன்வாதுபேசி
பண்ணானபொருளறிந்துவாதம்பாரு
பார்க்கையிலேதவறிவிட்டால்வந்துசேர்வேன்
ஒண்ணாகியுன்மனதிற்குருவாய்நின்று
வோதிவைப்பேன்கருக்களெல்லாமுறுதிதானே. (௫௫௰)

தானென்றமவுனகலைக்கியானமெல்லாஞ்
சாற்றுவேனுன்னுடலிற்கலந்துகொண்டு
ஊனென்றவென்பேச்சைகடந்திடாதே
யுறுதிபெறமனதில்வைத்துகுருவென்றெண்ணி
பானென்றவுலகத்திற்சித்தர்க்கெல்லாம்
பகருவேன்ரோமனுடபிள்ளையென்று
கோனென்றவுன்குருவுமாரோவென்னிற்
கூறடாரோமனென்றபேருந்தானே. (௫௫௧)

பேருதான்சொல்லயிலேசேர்வதென்யாற்
பெருமையென்றவைஞ்ஞூற்றின்பேரைச்சொல்லு
கூறுதான்குருநூலின்பேரைச்சொல்லு
கூட்டமிட்டசித்தரெலாம்பேசமாட்டார்

வாறுதான்புசண்டருடமார்க்கமென்று
வாதாடிசண்டைசெய்யமாட்டாரையா
வேறுதானுந்தனுக்குபுத்திசொல்வி
விள்ளாமலுள்ளபடிநூலுரைப்பார்பாரே. (கூருஉ)

பாரப்பாபுசண்டருடவர்க்கமென்றால்
பயப்படுவார்சித்தரெல்லாம்பாருபாரு
தாரப்பாசாபமதுபலிக்குமென்றுந்
தானுரைப்பாருந்தனுக்குதண்மையாக
சீரப்பாவெந்தனுக்குமைந்தனுகி
றீர்க்கமாயஷ்டதிக்குவென்றுயானுல்
காரப்பாவெந்தனுக்குகீர்த்தியுண்டு
கருத்துகந்துசொல்லுகிறேனின்னங்கேளே. (கூருங)

அஷ்டசித்திதைலம்.

கேளடாவஷ்டதிக்குவென்றுநீயுங்
கீர்த்திபெறவேணுமென்றுற்சொல்லக்கேளு
கோளடாவாராதுயஷ்டசித்தி
கூறுவேன்தம்பனமும்வசியமார்க்கம்
வாளடாபேதனமுச்சாடனத்திேனுடு
மைந்தனே ※ வாரூடகணமொன்றுக
சூளடாமோகனமாரணத்தின்போக்குஞ்
சொல்லாதகருக்கஎல்லாஞ்சொல்லுவேனே. (கூருச)

※ ஆரூடமெனமருவியது.

சொல்லுவேனஷ்டசித்திகருவேதென்னில்
சூட்சமாய்பிண்டமதைசொல்லக்கேளு
வெல்லுவேனிளங்கொடியாண்முதலாம்பிண்டம்
வெம்பியேயொன்பதிலேவிழுந்துதானுல்
சொல்லவேதானெடுத்துகொண்டுநீயுந்
தீர்க்கமாய்சத்தியினுல்துண்டுபண்ணி
மெல்லவேகல்லுறலிலிட்டுதாக்கி
விளம்புவேன்சட்டைப்பாரையதனுற்குத்தே. (கூருரு)

குத்தியேபாண்டத்திலிட்டுக்கொண்டு
கூட்டுவாய்தாளகமும்வீரம்பூரஞ்
சுத்திசெய்ததுருசுடனேகந்திதானுஞ்
சூட்டுவேனவுரியுடன்நீலங்கூட்டி
சத்தியென்றபூநீறும்வெடியுப்பும்போட்டு
தாக்கடாவகைவகைக்குப்பலமொன்றுக

முத்தியுள்ளகருங்குருவைக்காடியாலே
    மூர்க்கமுடன்தானரைத்துக்கலக்கிடாயே (௫௱௬)

கலக்கியேகாடியதுபடியெட்டுக்கு
    கண்டித்தபிண்டமெல்லாமொன்றாய்ச்சேர்த்து
துலக்கியேதிரியெரிப்பாய்வற்றுமட்டுந்
    துப்பறவாய்மெழுகாகும்பதத்திலேதான்
விலக்கியதைக்கிண்டியிலப்பாகேளு
    விதமென்னபசுநெய்யைப்போலேயாகுந்
தலைக்கிதுவேமுடிவாகுமஷ்டசித்தி
    தானடங்கும்பேருயிதின்றயிலந்தானே. (௫௱௭)

தானென்றதயிலமதைப்பீங்கானுள்ளே
    தான்வடித்தப்புறத்தில்வைத்துக்கொண்டு
தேனென்ற ※ வெளிக்கருவைசொல்லக்கேளு
    திறமையென்னநாடுநகரெல்லாந்தோற்று
மூனென்றபிறருக்குதெரிய,தென்று
    மொளித்துவைப்பாருலகத்திலுள்ளபேர்கண்
மானென்றவிழியிருள்விலகிநின்ற
    வார்த்தையல்லோகருவாகிவளர்ந்தவாறே. (௫௱௮)

※ வெளிக்கரு-உருதுசிலை.

வாறுகேளுலகத்திலெல்லோர்க்குந்தான்
    வண்ணார்க்குத்தெரிந்திருக்கும்வளமையாக
காருகேள்கன்னியர்கள்ருதுவானாளென்று
    காட்டுவார்சொற்பனம்போல்வார்த்தையாகுஞ்
சீருகேளிப்படியேலோகமெல்லாந்
    தீர்க்கமாய்வீட்டுக்குள்ளாகாதென்று
ஆருகேள்வார்த்தையிட்டுவீட்டுக்கப்பாற்
    றண்டுபண்ணிவைத்ததுமேகருவுமாமே. (௫௱௯)

கருவானவெளிக்கருவைச்சொல்லிவைத்தேன்
    காட்டுவேனுட்கருவைக்கருதிகேளு
திருவானமங்கையின்மேற்கவனமாகி
    தீர்க்கமாயடக்கமதிலொடுக்கஞ்செய்து
மருவானவார்த்தையதையார்க்குஞ்சொல்ல
    மனதஞ்சிநின்றுவிட்டகருவொன்றாகு
முருவானவித்துவல்லோயுட்கருவுமாகு
    முத்தமனேவிதையறிந்துண்மையாரே. (௫௱௰)

பாரப்பாவுட்கருவைச்சொல்லிவைத்தேன்
பரவெளிக்குளுட்கருவைச்சொல்லக்கேளு
சீரப்பாயண்டமாபிண்டத்துள்ளே
சேர்ந்துநின்றசவ்வொன்றுகோடியென்பார்கள்
காரப்பாவுன்னுருவைக்கார்த்தவீடு
கருவீடுகுருவீடுகருணைபெற்ற
வாரப்பாவுனைவளர்த்தமவுனவீடு
வந்துதடாவுன்பிறகேமகனேகேளே. (௫௬௧)

கேளடாகொடிநஞ்சுமாவென்பார்கட்
கிட்டாதாருக்குமுதற்றாந்தானப்பா
கோளடாவாராமல்மூன்றுபேரு
கூடிநின்றவிபரமதைக்கூருவேன்பார்
சூளடாவிந்துவல்லோருத்திரனுகுஞ்
சொற்பெரியநாதமடாவிஷ்ணுவாகும்
வாளடாயுனைவளர்த்தமூலவீடு
வையகத்திற்பிர்மாவேவாழ்மனையுமாச்சே. (௫௬௨)

ஆச்சப்பாவுட்கருவும்வெளிக்கருவுஞ்சொன்னேன்
அப்பனேமுதற்கருவும்விபரஞ்சொன்னேன்
போச்சப்பாயிப்படியேகருக்களெல்லாம்
பூட்டிவைத்தேனன்னூற்றிற்புகழுஞ்சொன்னேன்
பேச்சப்பாபேசாதேயொருவரோடும்
பேசினூற்சித்தருடசாபமெய்தும்
தீச்சப்பாபெருவெள்ளம்நிலைக்கொட்டாது
நின்மனத்திற்பயம்வைத்துத்தொழிலைப்பாரே. (௫௬௩)

பார்க்கையிலேயொருவருடன்பேசவேண்டாம்
பரிவாகசெய்யவஷ்டசித்துமாடுங்
காக்கையிலேமுன்சொன்னதயிலத்தோடே
கண்டுநீமுற்கருவுங்கழஞ்சியொன்று
சேர்க்கையிலேயொன்றாகக்கலந்துகொண்டு
தீர்க்கமாய்பச்சைகற்பூரம்போடு
ஏர்க்கையிலேகுங்குமப்பூகோரோசனையுங்கூட்டி
யிதமானபுனுகுடனேயெல்லாஞ்சேரே. (௫௬௪)

சேர்க்கவேவகையொன்றுகழஞ்சுவொன்று
திறமாகப்பொடித்திட்டுசொல்லக்கேளு
கார்க்கவேரவிதனிலோர்நாள்வைத்து
கடத்தினிடவாய்தனையுமடைத்துவைநீ

பார்க்கையிலேநவமியதுயாதிவாரம்
பருவமுடன்வந்ததென்றாற்சொல்லக்கேளு
மேர்க்கையிலேயென்தாயார்சக்கரத்தின்முன்னே
மென்னசொல்வேன்வைத்துநீபூசைபண்ணே. (௩௬௫)

பண்ணப்பாயவடனக்குவுண்மைபூசை
பாங்குபெறச்செய்துநீயப்பாற்கேளு
வண்ணப்பாயப்பாலேயகாரமூர்த்தி
வாணியனும்வடுகனுடபூசைசெய்து
உண்ணப்பாவயிரவர்களெட்டுப்பேரு
முறுதிபெறவுன்னிடத்திற்காக்கவென்று
விண்ணப்பாதீபமுடன்தூபங்காட்டி
மெய்நிறையபூசைசெய்துயப்பால்வையே. (௩௬௬)

வையப்பாயட்டசித்துதயிலஞ்சொன்னேன்
மைந்தனேயெத்தொழிற்குங்குருவுமாகும்
மெய்யப்பாசொல்லிவைத்தேன்வசியமுதலெட்டும்
விருதுபெற்றதயிலத்தைதொட்டுப்போடும்
பொய்யப்பாசொல்லவில்லைதொழில்களெல்லாம்
போக்கோடேதயிலமதுமுப்பூவாகுங்
கையப்பாவுதவுமல்லோசகலசித்துங்
காட்டுமடாயஷ்டதிக்கும்வெல்லலாமே. (௩௬௭)

வசியத்தைலம்.

வெல்லுவேனின்னமொருதயிலங்கேளு
விருதுபெறவசியத்தின்போக்குக்கெல்லாஞ்
செல்லவேசொல்லுகிறேன்மூன்றுங்கெற்பஞ்
சென்றெடுப்பாயாதித்தவாரந்தன்னிற்
சொல்லுவேன்மனவடக்கியின்னங்கேளு
சோம்பாதேமுதற்றாந்தாளெடுத்துவந்து
வல்லமைகட்செய்யாதேசிவந்ததாக
மைந்தனேகொண்டுவந்துசொல்லக்கேளே (௩௬௮)

கேளடாமுன்போலேபொடியாய்ச்செய்து
கிருபைபெறவேணுமென்றுவுரலிற்றூக்கு
சூளடா*வரிதாரஞ்சூடன்கந்தித்
தூக்கடாபூரமுடன்வகையொன்றுக்குத்
தூளடாபலமொன்றுபொடித்துப்போட்டு
துப்பறவாயத்திப்பாற்படியுமூன்று

நாளடாவிட்டுநீகலக்கித்தியால்
நலமாகவெரித்துவிடவகைகயைக்கேளே. (௬௬௯)

※ அரிதாரம்-தாளகம்.

வகையென்னசொல்லுகிறேன்சுண்டிநற்றால்
வருகுமடாதயிலமதுவெண்ணெய்போலே
துகையென்னவெண்ணெய்நீவடித்துக்கொண்டு
சொல்லுவேன்கடுகதனைமெழுகாய்ப்பண்ணி
பகையென்னவென்றவர்களுன்னைக்கண்டாற்
பணிவார்கள்தைலத்தின்பாகத்தாலே
தகையொன்றுமில்லையடாயிங்காளுள்ளே
தயிலமதைவிட்டுநீயப்பால்வையே. (௬௭௰)

வைத்துமேவசியமென்றதயிலமாச்சு
வாங்கியந்தமெழுகதனைச்சிமிளில்வைத்து
வைத்துமேவால்வளையஞ்சீலைசெய்து
வளமாகவோரிடத்தில்ரண்டையுந்தான்
வைத்துமேபோகாதேயின்னங்கேளு
வாகாகவஞ்சனத்துக்காதிவிந்து
வைத்துமேசெய்வதற்குவிபரமெல்லா
மைந்தனேசெய்தொழிலும்புனிதமாமே. (௬௭௧)

அஞ்சனத்தயிலம்.

புனிதமென்றயாறுக்குள்விழுந்துதானற்
போக்கென்னநாலாவதப்பாகேளு
கெணிதமென்றசுக்கிரவாரந்தன்னிற்
கேளடாகொண்டுவந்துபொடியாய்ச்செய்து
அனிதமென்றுநினையாதேசொல்லக்கேளு
அப்பனேபூநீறுகொஞ்சம்போட்டு
கனிதமாய்கிரும்பதிலேபலமிரண்டு
கட்டாகநருக்கியேகூடப்போடே. (௬௭௨)

போடவேசாதிக்காய்பலமிரண்டு
பொடியாகத்தூட்பண்ணியதிலேபோட்டு
நாடவேகல்லுரலின்மைபோலாட்டி
நளினமாய்ப்பாண்டத்திலிட்டுக்கேளு
தேடவேயமுரியதுபடிதானுலு
திறமாகக்கலக்கியதையடுப்பில்வைத்து
தோடவேவெட்டியுடவிறகாற்றீயைத்
தொந்தமாநீயெரித்தெண்ணெய்வாங்கே. (௬௭௩)

வாங்கியேபீங்கானி லடைத்துக்கொண்டு
வாய்மூடியோரிடத்தில்வைத்துநீயுந்
தூங்கியேதிரியாதேயஞ்சனத்துக்காதி
சொல்லிவைத்தேனின்னமுநான்சொல்லக்கேளு
தாங்கியேமாரணத்தின்றயிலந்தன்னை
தாயெனக்குச்சொன்னபடிசாற்றினேன்யா
னோங்கியே * முதற்றரந்தான்பூரணமுமாகு
லுசத்தியடாமெத்தநன்றுரைக்கக்கேளே. (௱௭௪)

* முதற்றரம்-கருசீலை.

மாரணத்தயிலம்.

உரைக்கவேசொல்லுகிறேன் இறமேதென்னி
லுயர்த்தியடாகருப்புவன்னமெத்தநன்று
இரக்கவேசனிவாரந்தன்னிலேதான்
இரமாகவெடுத்துவந்துசொல்லக்கேளு
மறைக்கவேயில்லையடாநஞ்சோடொக்க
மைந்தனேயெடுத்துவந்துபொடியாய்ச்செய்து
தறைக்கவேவேம்பினுடபருப்பைக்கேளு
தனிகண்டுபலமதிலேகூடத்தாக்கே (௱௭௫)

தாக்கியேவேப்பிலையையுரலிற்போட்டு
தாக்கடாதவிடுபோலிடித்துக்கொண்டு
தேக்கியேபடியெட்டமுரிதன்னிற்
றிறப்பெறவேகலக்கியப்பூநீறும்போட்டு
தாக்கியேயிறுத்திடுவாய்த்தெளிவைநீயுஞ்
சாற்றினேன்படிநாலுபாண்டத்துள்ளே
வாக்கிலேசொன்னதென்றெண்ணவேண்டா
மைந்தனேகூடவிட்டடுப்பில்வையே. (௱௭௬)

வைத்துமேவேம்பினுடவிறகுத்தியால்
வகையாகத்தானெரிப்பாய்க்கமலம்போலும்
உளத்துமேயெண்ணெயதுவருகும்நோரம்
உத்தமனேவடித்துநீபீங்கானுள்ளே
காத்துமேமாரணத்தின்றயிலந்தன்னை
காற்றடங்கவிட்டுநீமூடிப்போடு
வேத்துமேயெதிராளிதலைகளெல்லாம்
விருதுபெற்றதயிலமதுவிளம்பொண்ணாதே. (௱௭௭)

ஒண்ணாதகருவகையின்றயிலந்தன்னை
வுரைத்துவிட்டேன்சித்தருடமறைப்பையெல்லாங்

கண்ணான தயிலமது சொன்னதாலே
கண்டித்தார் கும்பமுனி யென்னைத்தானும்
பொன்னான தயிலமிதைச் சொன்னாயானாற்
போகுமடா வுன்தேகம் பொடிமண்ணாகச்
சொன்னாலுந் தெரியாதோ சாபத்தானுந்
துடருமடா வுன்குலத்தைச் சுற்றுந்தானே. (௫௭௮)

தானென்ற சாபத்தாற் பயந்து சித்தர்
தானொளித்தார் குகைதனிலே வெளிவிடாம்ற்
றேனென்ற வமுர்தமடா யிந்த நூலுஞ்
செப்பினே னென்குருவின் வாக்குகேட்டு
நானென்ற கும்பமுனி யெனக்குவாசான்
நானதொரு நந்தியுமே யெனக்குப்பாட்டன்
வானென்ற புசுண்டருமே யென்தகப்பன்
வாக்கருளிச் செய்ததிலே வசனித்தேனே (௫௭௯)

வசனித்தவைன் னூற்றிற் கனுபானங்கண்
மைந்தனென்ற பிள்ளைக்குத் தெரியவென்று
வசனித்த வார்த்தையொன்றுஞ் சொல்லவில்லை
மகத்தான தொழில்களெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வசனித்த சித்தருடன் தன்னியவானான்
வமலனா ரருட்பெற்றுச் சொன்னே னப்பா
வசனித்த வாயிலைத்தான் பூசைபண்ணு
வகுத்துரைப்பா ளட்டகன்ம மெட்டுந்தானே. (௫௮௰)

அஷ்டகன்மச்சக்கரம்.

தானென்ற வட்டகன்ம மெட்டுந்தான்
சாத்துகிறேன் சக்கரத்தின் தொழிலைக்கேளும்
வானென்ற வாறுவறை நேரேகீறி
வழக்கமாயாரு வறைகுறுக்கேகீறி
தேனென்ற விருபத்தஞ் சறையினுள்ளே
சேர்த்திடு நீயக்ஷரத்தைத் தீர்க்கமாக
வானென்ற-வய-நம்-சி-யென்றுமாறு
வளமைபெற மறுபுவீட்டிச் சொல்லக்கேளே. (௫௮௧)

சேளடா-மசி-வயந-வென்றுதானுங்
கிருடைபெறய ந-மசி-வ-வென்றுபோடு
வாளடாவதின் கீழே-சிவயநம-வென்று
மைந்தனே யடுக்கடுக்காய்-நமசிவய-மென்று

கோளடாவாராதுயன்பத்தொன்றுங்
கூறுவேன்வழக்கமதையின்னங்கேளு
பாளடாபோகாமல்வகாரந்தன்னிற்
பாங்குபெறவெட்டும்நீபாருபாரே. (௩௮௨)

பாரப்பா அகாரமதின்முப்பதாகும்
பாடுவன்நகாரமதிலொன்றுபோடு
சேரப்பாமகாரமதிலஞ்சுபோடு
திர்க்கமடாசிகாரமதிலேழும்போடு
மாரப்பாயிப்படியேலக்கந்தன்னை
மறையுறேனைந்தெழுத்துமங்கேதிற்கு
நேரப்பாயந்தெழுத்திலனந்தலக்கம்
நினைவாகயிட்டுநீபூசைபண்ணே. (௩௮௩)

பண்ணவேயிருபத்தஞ்சுவீடு
பாங்குபெறவோமென்றுசுத்திக்கட்டி
கண்ணவேபதின்மூன்றும்விட்டிலேதான்
கருத்துவைத்துமுக்கோணமதின்மேல்வட்டம்
உண்ணவேமகாரமதைக்கீழேசாத்தி
யுறுதிபெறஅகாரமதைநிறுத்திப்போடு
எண்ணவேவகாரமதின்முடிமேற்றானு
மீட்டிடுவாயஃகெனவுமெழுத்தும்பாரே. (௮௪௩)

பார்க்கவேமுக்கோணம்வலபாகத்திற்
பாவிப்பாய்கிலியுமென்றவெழுத்தைநீயுஞ்
சேர்க்கவேயிடபக்கஞ்சொல்லக்கேளு
சென்றிடுநீயரிசியென்றேயெழுத்தையப்பா
யார்க்குமேசொல்லாதேவாலதிட்சை
யப்பனேசிவதீக்ஷையதிலேயாச்சு
கார்க்கவேமேருவினுடபூசைதானுங்
காட்டினேன்சக்கரத்திலின்னங்கேளே. (௩௮௫)

இன்னமுந்தான்சொல்லுகிறேன்வறைகட்டோறு
மீட்டிடுவாய்சூலமதுயிடைவிடாமற்
சொன்னதொருசூலத்தினுச்சிமீதிற்
சூட்டடா-ஸ்ரீ-யென்றுசுத்திக்கட்டி
கன்னவேயிதின்மேலே மூன்றுவறைபோட்டு
கண்டிடுநீவாசலறுநான்கும்விட்டு
முன்ணவேவாசலிலேதேவதைசொல்வேன்
வொசத்தியட்டசக்கரத்தினுண்மைதானே. (௩௮௬)

உண்மையென்றுசொல்லிவைத்தேனின்னங்கேளு
உறுதிபெற்றதேன்வாசற்கணபதியின்பீசந்
தண்மைபெறவேணுமென்றுயிட்டுநீயுந்
தாக்கடாமேல்வாசற்கந்தன்பீசம்
நண்மையென்றுபோட்டுவிடுநீயாமென்று
நாட்டிடுவாய்வடவாசற்றுர்க்கைபீசம்
பண்மையென்றுளம்போட்டுசொல்லக்கேளு
பார்க்கவேகீழ்வாசல்வயிரவனைப்போடே. (௫௮௭)

போடுநீ-ஹ்ரி-ஓம்-யென்றுபோட்டுநீ
புகழ்பெறவேசிதம்பரமுந்தேவிபூசை
ஆடுவாயொன்றாகச்சொல்லிவைத்தே
னுத்தாளுமப்பனுமோமந்தவிஞ்சை
தேடுவான்கோடியிலொருவனுண்டு
தேசத்தின்மானிடரோசெய்யப்போறார்
வாடுவார்தேவரெல்லாம்பூசைசெய்ய
மாட்டாமன்மதிமயங்கிநின்றார்யாரோ. (௫௮௮)

பாருநீவன்னூற்றினூலுக்குள்ளே
பாடிவைத்தேன்சக்கரங்களொளிப்பில்லாமற்
சேருநீசக்கரத்தைப்போதஞ்செய்யத்
தீர்க்கமாயொருவருந்தான்சொல்லமாட்டார்
சாருநீசக்கரத்தைப்பூசைசெய்து
சாற்றினலட்டசித்துங்கைக்குள்ளாகும்
வேருநீயெண்ணாதேமுன்போற்பூசை
விசிதமாய்ச்செய்துவிடவெல்லாஞ்சித்தே. (௫௮௯)

சிற்றானசக்கரத்தைமுன்னேபூசி
தீர்க்கமடாலட்சமுருசெபித்தாயானா
சற்றானதேவர்முதற்கணங்கட்குமுந்
தோன்றுவாருத்திரனுஞ்சோதிகூடப்
பற்றானபத்தனென்றுமனதிற்கொண்டு
பயந்துனக்குச்சொல்லிவைத்துபதேசிப்பார்
முற்றானவஷ்டசித்துதுறைகளெல்லா
மூர்க்கமாய்ச்சொல்லிவைப்பாரின்னங்கேளே. (௫௯௰)

வசிகரத்தின்றிலர்தம்.

கேளப்பாசிதம்பரசக்கரத்தைப்பூசைசெய்து
கிருபைபெற்றுவயிரவன்றன்தியானத்தாலே
சூளப்பாயட்டசித்துமெட்டுமாடச்
சொல்லுகிறேன்வசிகரத்தின்றிலர்தந்தன்னை

வாளப்பாகஸ்தூரிமஞ்சளோடு
  மக்களேமரமஞ்சட்கிழங்குமஞ்சள்
நாளப்பாசந்தனம்பூரம்வெள்ளூரமாகும்
  நாட்டுவாய்ப்புனுகுடனேதிகைப்பூடாமே. (௫௬௧)

பூடானகுங்குமப்பூகோரோசனையுங்கூட்டி
  போக்கோடேமுப்பூவின்தயிலநாட்டித்
தேடானவித்திலேகழஞ்சுவிட்டுத்
  திரம்பெறவேசமனுகக்கூட்டியாட்டி
காடானவிருட்சமுதன்மலைகளெல்லாங்
  காணுமுன்னேவணங்குமடாத்திலர்தப்போக்கு
சூடானசூடெழும்பிமறைகும்போது
  சுருதிபெறவழித்துனிசிமிழில்வைப்பே. (௫௬௨)

வைய்யப்பாபீங்கானிற்பரணிதன்னில்
  வைத்துமேமோகினியைத்தியானஞ்செய்து
மெய்யப்பாசொல்லுகிறேன்சுடலைநீறை
  மெழுமையாய்த்தானெடுத்துயிலைமேல்வைத்து
கைய்யப்பாகொண்டெழுதுமுக்கோணத்தை
  கட்டானவதினடுவேவசிகாராம்போடுங்
செய்யாப்பாயதினடுவேவட்டம்போடு
  திறம்பெறவேசூலமதிற்செலுத்திடாயே. (௫௬௩)

செலுத்தியேயோரிடத்தில்வைத்துக்கொண்டு
  தீர்க்கமாயந்திடத்தைச்சுத்திபண்ணி
யலுத்துநீபோகாதேசக்கரத்தைவைத்து
  அதிநடுவேசிமிழ்வைத்துப்பூசைபண்ணி
வலுத்துமேப்போச்சுதடாத்திலர்தவாடை
  மைந்தனேவடைபருப்புயவலுந்தேங்காய்
பெலத்துமேபோகவென்று ※ பானம்வைத்துப்
  பெருமையாய்க்கூவிளம்பத்திரியுஞ்சாத்தே. (௫௬௪)

※ பானம்-கள்

மோகினிமந்திரம்.

சாத்தியேதீபமொடுத்தூபங்காட்டி
  சதிரானமந்திரத்தைச்சொல்லக்கேளும்
போத்தியே ஹ்ரீ-ஓம்-வசிபமோகினி-வா-வா-வருகவென்று
  பூரிப்பாயாயிரத்தைதன்னூறுந்தான்
மாத்தியேமோகினியுன்வசமதாகு

மப்பனேவசிகரத்துக்காதியாதி
வாத்தியேயிப்படிநீப்பூசைசெய்து
மைந்தனேதிலர்தமதைநெற்றிற்போடே. (ருகூரு)

போடவேஜெகமெல்லாம்வசியமாகும்
பூதலத்திலரசரெல்லாமுன்னைக்கண்டாற்
றேடவேயுனக்கடிமையானேனென்றற்
றிருமபவுமேயுன்னிடத்திலடக்கமாகி
நாடவேபெண்களெல்லாமுன்னைக்கண்டா
லுபசனுமென்றுசொல்லிக்காலில்வீழ்வா
ராடவேதேவதைகள்வசியமாகு
மப்பனேவுனக்கிடேயார்தான்காணே. (ருகூசு)

காணவேயின்னமொருவசியங்கேளு
கருவானத்திகைப்பூடுபூசிப்பார்த்துத்
தோணவேகையான்வேர்விஷ்ணுமூலி
சொல்லுவேன்வெளளையதாய்ப்பிடிங்கிவந்து
ணுணவேபனிதாங்கிமூலிவேரும்
நன்றாகக்கருக்கியேகலவத்திட்டு
யாணவேவுன்னுடையாணுவமாம்விந்து
யப்பனேகழஞ்சயிடைச்சமனுய்க்கொள்ளே. (ருகூஎ)

கையான்-கரசலாங்கண்ணி.

கொள்ளவேதானரைப்பாய்முன்தயிலத்தாதே
கூட்டியேசிமிழ்தனிலேவைத்துக்கொண்டு
வள்ளவேமுன்போலேமோகினியைப்பூசி
வப்பனேசெபமாகவசியம்நூறு
மெள்ளவேதானெடுத்துப்புருவமைப
விதித்தபடியிட்டிடவேயென்னசொல்வேன்
தள்ளவேசமர்க்களத்தினடப்பாயானுற்
றன்மையாய்சரணமென்றுவிழுவார்பாரே. (ருகூஅ)

வசியவாடை.

விழுகவேஜெகமேழும்வசியமாகும்
விருதுபெத்தவாடையிதுசொல்லக்கேளு
தழுகவேவேண்டாங்காண் ✻ நீலிவேரும்
நாயுருவிவேருடனேசூரிவேரும்
தழுகவேவேணுமென்றால்விஷ்ணுமூலி
தானெடுப்பாய்சர்தனஞ்சாதிக்காயுந்

தொழுகவேகஸ்தூரிமஞ்சளோடுத்
துப்பறவாய்க் * கூகைநீர்தாக்குதாக்கே (௩௯௯)

* நீலி-அவுரி*சூரி-முதக்குரை-நத்தைச்சூரி
*கூகைநீர்-காட்டெருமைபால்-அல்லது-கிழங்குதண்ணீர்.

தாக்கவேசூடனொடுசாம்பிராணியேலந்
தாக்குவேனநத்தைமுதற்சோம்புதானு
மாக்கவேமரமஞ்சட்சாருமஞ்சள்
மைந்தனேநானெடுப்பாய்கஸ்தூரிவீதம்
பாக்கவேபத்திரியுமரசுதானும்
பக்குவமாய்மனிதறேகாணப்போரார்
சேக்கவேபச்சிலையின்கிழங்குடனேபட்டை
திரமான * சாத்துபட்டைகோஷ்டங்கூட்டே. (௪௱)

* சாந்துப்பட்டை-வாசனைப்பட்டை.

கூட்டடாநன்றாகவகையொன்றுக்கு
கொண்டுநீசரியிடையாயெடுத்துக்கொள்ளு
தாட்டடாகல்லுரலிலிட்டுத்தாக்கி
நன்றாகவேயிடித்துவடியிட்டேதான்
சூட்டடாபீங்கானில்வைத்துக்கொண்டு
சொல்லுறேன்வெள்ளுரமும்புழுகுங்கூட்டி
ஊட்டடாசீலையிலேபுடடுபோலே
வோகோகோகூட்டிவைத்துண்மைகேளே. (௪௱௧)

எழாம்பிண்டம்.

கேளடாபிண்டமதுயேழாந்திங்கட்
கிருபைபெறக்கொண்டுவந்துசொல்லக்கேளு
சூளடாபாண்டமதிலிட்டுநீயுஞ்
சொல்லுவேனத்திப்பாற்கள்ளும்வாரு
பாளடாபோகாமற்படிதான்ரண்டு
பாண்டமதிலிட்டுநீயப்பாற்கேளு
நாளடாபின்றொடரிசமூலம்வாங்கி
நன்றாகப்பலம்பத்துநொருக்கிப்போடே. (௪௱௨)

* பின்துடரி-இலைகப்பூண்டு

போட்டுமேவேடுகட்டியதின்மேற்கேளு
போக்கோடேமுன்பொடியைப்பரப்பிக்கொண்டு
நாட்டுமேசட்டிதனைக்கவிழ்த்துமூடி
நலயாகச்சீலைமண்வலுவாய்ச்செய்து
சூட்டுமேயடுப்பினிலேவைத்தமூட்டு
சொல்லுவேனுவறையின்விறகுதீயாற்

காட்டுமேகமலம்போலெரிநேற்பாகங்
 கழண்டுருகிப்போகுமடாகண்டுபாரே. (௪௱௩)

பாரப்பாவாசமதுமேலேபட்டாற்
 பத்தியேசுததுமடாயிருந்தபேரை
நேரப்பாகாத்தோட்டம்பார்த்துநில்லு
 நிதிபெறவேவத்தியதுசுடரைவீசுஞ்
சேரப்பாபதமென்றுயிறக்கிநீயுந்
 திறமைபெறவாறவிட்டுபிட்டைவாங்கிக்
காரப்பாநிழலுலர்த்திப்பீங்கான்தன்னிற்
 கடக்கவேவைத்துநீயப்பார்க்கேளே. (௪௱௪)

வைரவர்த்தியானம்.

சேளடாமுன்தயிலங்கருவுங்கூட்டி
 கீர்த்திபெறமோகினியின்சக்கரத்தின்முன்னே
சூளடாவைத்துநீபூஜைபண்ணி
 சொல்லுவேன்வயிரவர்தன்தியானத்தாலே
வாளடா-அரி-ஓம்மவுனமந்திரம்
 வயிரவாயநம்-வாவருகவென்று
தாளடாமனதிலிட்டவுருத்தாணூறுந்
 தாக்கடாமோகினியந்திரமுஞ்சேர்த்தே. (௪௱௫)

சேத்துநீயோதிடவேயென்னசொல்வேன்
 ஜெகமெல்லாமயங்குமடாயிந்தவாடை
பாத்துமேபத்திரமாய்ப்பூசைசெய்து
 பரிமளிக்குங்காத்தோட்டந்தன்னிலேதான்
காத்துமேபின்னையென்றுபாக்கொட்டாது
 கனமோகஞ்செய்யுமடாயென்னசொல்வேன்
வார்த்துமேதன்வீட்டிற்செல்லும்போது
 வப்பனே*நிம்பெண்ணெய்பூசிச்செல்லே (௪௱௬)

* நிம்பெண்ணெய்-வேப்பெண்ணெய்.

செல்லவேவாடையதுமுரிந்துபோகுந்
 தீர்க்கமடாவரப்பையிட்டுமுழிகிப்போடு
வெல்லுமேதேவர்முதற்கணங்களெல்லாம்
 மிகவணங்கியுந்தனுக்குநிற்கும்பாரு
வல்லமையாய்பேசாதேவாடைப்போக்கை
 மனதில்வைத்துப்பரவசியம்பாருபாரு
கல்லுமேகரையுமடாவிந்தவாடை
 கண்சாணுதொருவருக்குஞ்சாட்டொண்ணாதே. (௪௱௭)

தம்பனம்.

காட்டாதேதம்பனத்தைச்சொல்லக்கேளு
    கருவானவழுக்குராசங்கம்வேருஞ்
சூட்டானவால்விழுதுஞ்சூரிவேருஞ்
    சொல்லுவேன்கீழ்க்காயினெல்லிவேரும்
நாட்டடா நன்றாரிவெண்கொழிஞ்சி
    நன்மையென்றகுண்டுமணிவெள்ளையாகும்
கூட்டடாகிலுகிலுப்பைபவேருமாகும்
    கொண்டெடுப்பாவாதியென்றவாரந்தானே. (௬௭அ)

தானென்றவாரமதிற்பெலியுமிட்டு
    தாக்கடா திருவாணத்தூபங்கொண்டு
கோனென்றமூலியெல்லாம்வேராமதற்
    கொண்டுவந்துசட்டிதனிற்கருக்கிக்கொண்டு
ஊனென்றதேசியுடகபாலரத்த
    முத்தமனேமண்ணுளியின்பாம்பின்வாலுந்
தேனென்றவேரெல்லாம்வகையொன்றுக்கு
    செப்புவேன்தனித்தனியொன்றுதானே. (௬௭கூ)

ஒன்றானவேரெல்லாம்ஙறுக்கிப்பின்பு
    வுறைக்கிறேன்கருவகையையின்னங்கேளு
நன்றானவுதிரமுடன்வாலுநேராய்
    நாட்டடாக்கழஞ்சுயிடைவளாதானப்பா
கன்றானகல்வமதிலிட்டுக்கொண்டு
    கருதியறைமுப்பூவின்தயிலத்தாலே
மன்றான*வெண்மதியின்சிமிழிலேதான்
    மைந்தனேவழித்திடுநீவகையைக்கேளே. (௬௭௰)

*வெண்மதி-வெள்ளைசெம்பு

கபாலவயிரவன்வசியம்.

வகையென்னசொல்லுகிறேன்கபாலருத்ரன்
    வயிரவர்தன்சிபத்தைநீமாட்டுமாட்டு
தகையென்னஹரி-ஓம்-கபாலவயிரவாநம
    தயவாவா-வருகவருக-வென்றுசொல்லி
நகைபுரியுப்வயிரவத்தின்தியானநூறும்
    நாட்டியேபுருவமைய்ந்திலர்தய்யோடு
பகையொன்றுமில்லையடாவுனக்குத்தானும்
    பருவமிதிற்சொல்லுகிறேன்பாகங்கேளே, (௬௭௰க)

பாகமென்னவாபுதங்களெல்லாந்தப்பும்
    பார்க்கயிலேயிரும்புவெட்டுக்குண்டேறாது

தாகமென்னபீரங்கிவெடித்துப்போகும்
சமுசியங்களில்லையடாவெட்டறுது
போகமென்னவிந்துவதையிரங்கொட்டாது
போக்கோடேபூதமுதலடங்கிப்போகுங்
காசமொடுபட்சிகளுங்கட்டுண்டுநிற்குங்
கடிவாயுமிருகமுதலடங்குந்தானே, (௯௰௨)

தம்பனச்சக்கரமறைப்புமை,

தானென்றதம்பனத்தின்சக்கரத்தைக்கேளுஞ்
சாத்துவேன்சதுரங்கக்கோணமிட்டு
மூனென்றநடுமையம்-ஐயும்போடு
முத்தமனேபூசைபண்ணுறுதியாகுந்
தேனென்றமறப்புமையின்விபரங்கேளு
திறமாகப்பச்சோந்தித்தூளினோடு
கோனென்ற※கருந்தேசிப்பித்தினோடு
கூட்டடாக்கறுத்தநிறமட்டைத்தானே, (௯௰௩)

※ கருந்தே-சிகருங்கழுதை

அட்டையென்றசிறுமதுமூலங்கூட்டு
வப்பனேகரும்பூனைக்கண்ணும்பித்து
முட்டையென்றகருங்காக்கையண்டமொன்று
மூற்கமுடனிவையெல்லாங்கல்வத்திட்டு
கொட்டையென்றகருநதாமணக்கின்வித்து
கூறுவேன்சிவன்வேம்புசமூலத்தோடு
மட்டையென்றபேய்பீர்க்கினத்தினோடு
மைந்தனேயிவையெல்லாந்தயிலம்வாங்கே. (௯௰௪)

வாங்கியேகல்வத்திலிட்டுக்கொண்டு
மைந்தனேதாணரைப்பாய்த்தயிலத்தாலே
தாங்கியேமைபோலேயாட்டிக்கொண்டு
தானெடுப்பாய்முதற்றிரந்தான்விலக்குச்சீலை
தூங்கியேதிரியாதேவைங்கோலந்தான்
துப்பறவாய்த்தான்கிழித்துமையைப்பூசி
நீங்கியேயிருப்பகலிற்றிரியைப்போட்டு
நிமாவிடுமுப்பூவின்தயிலந்தானே. (௯௰௫)

தைலமதுவிட்டுநீதீபமேத்தித்
தான்கவிழ்த்து※கோறைபடாவண்டைவாங்கி
தைலமதுதெரியாமன்மறைப்பதற்கு
சாத்துகிறேன்புல்லாமணக்கின்வித்தை

தைலமதுபோல்வடித்துத்தயிலந்தன்னை
    தானெடுத்துப்பூட்டிவிடுகபாலவோட்டில்
தைலமதுபோலிரங்கும்மைமையைவாங்கி
    தன்மைபெறமாவிலிங்கஞ்சிமிழில்வையே. (௨௱௰௬)

※ கோறை-மயிரில்லா.

உன்மத்தன்வயிரவர்தியானம்.

வையப்பாவயிரவத்தின்சக்கரத்தின்முன்னே
    வகைசொல்வார்வுன்மத்தவயிரவன்தானப்பா
மெய்யப்பாசொல்லிவைத்தேன் அரிஓம்வுன்மத்தாவயிரவா
    வாவாயநமவருகமறையவென்று
செய்யப்பாவுருவதுதான்மூவாயிரத்தெட்டு
    செபித்திடவேசிமிழிதுதான்மறையும்பாரு
பொய்யப்பாசொல்லவில்லைமுன்னுரைத்த
    போதமென்னமுப்பூவின்தயிலந்தானே. (௨௱௰௭)

தானானதயிலமையின்புருவமீதிற்
    றன்தேய்த்துப்பார்த்திடவேசிமிழ்தான்தோற்றும்
பூனானவயிரவர்க்குள்ளபூசை
    வுத்தமனேமுடிந்தபின்புயெடுத்துக்கொண்டு
மானானசிமிழ்தன்னையும்பதனம்பண்ணி
    மைந்தனேபணம்போலேகிலர்தம்போட்டு
தேனானவிர்தகினால்விட்டுத்தேய்த்து
    திரும்பியிடுதிலர்தமிதுசெய்கைபாரோ. (௨௱௰௮)

பார்க்கவேயண்டரொடுமுனிவரெல்லாம்
    பார்த்தாலுமுன்னுருவந்தோனுதப்பா
வேற்கவேமானிடரோகாணப்போறார்
    வென்னசொல்வேன்விபாமினிவின்னங்கேளு
சேர்க்கவேமையெடுத்துப்பதனம்பண்ணி
    தேவனும்பிராட்டியைநீமறைத்துப்போடு
காற்கவேயவளுடையபாதந்தன்னிற்
    காத்தாக்ஷாத்கனுபானம்முறைப்பாள்பாரோ. (௨௱௰௯)

மறைப்பைநீக்குமை.

பாரோநீயின்னமொருதொழிலைக்கேளு
    யாருலகின்மையொன்றுமறைப்பைநீக்க
சேரோநீயாட்காட்டிபித்துங்கள்ளு
    தீர்க்கமுடன்புலிநகமும்பூச்சியஞ்சு

வாரோநீதிலக்கூகைகண்ணுங்கூட்டி
மைந்தனேனுதத்தாலாட்டிப்பின்பு
காரோநீபுருவமையந்திலர்தம்போடு
காட்டுமடாவுன்றிரோகங்கண்டுபாரோ. (௪௨௰)

அஞ்சனம்.

கண்டுமேசொல்லுகிறேனஞ்சனத்தின்போக்கு
காட்டுவேன்தேவாங்குப்பித்துங்கண்ணுங்
கொண்டுமேசெம்போத்தின்கண்ணினோடு
கூறுவேனுந்தைக்கண் ※கூகைக்கண்ணுந்
தண்டுமேகருங்கழுதைக்கண்ணினோடு
தாக்கடாகருங்குருவிகண்ணிரண்டு
மூண்டுமேபன்றியுடனேமங்கூட்டி
மூஞ்சூறுதுளொக்ககூட்டுகூட்டே. (௪௨௧)

※கூகை-கோட்டான்.

கூட்டவேசெவ்வறணைவாலினோடு
கூறானசாதிக்காய்கிறாம்புதானும்
நாட்டவேரண்டுவலைகசரக்கைநீயும்
நலமாகதிருத்திவிடுவிராகனென்று
மாட்டவே ※மீன்வெட்டிவிராகனோடு
மைந்தனேயிவையெல்லாங்கல்வத்திட்டு
வாட்டவேயஞ்சனத்தின்தயிலந்தன்னை
வப்பனேவறைத்துநீமெழுகாய்ப்பண்ணே. (௪௨௨)

※மீன்வெட்டி-சுறா.

பண்ணியேமுதற்கருவாம்விலக்குச்சிலை
பத்திடுநீனிறமென்றல்சோதிவண்ணம்
கன்னியுடசிலையிலேவைத்துருட்டி
*கண்விழுந்தானைக்கண்சட்டிதூரி
யெண்ணியேமுதற்றாந்தானுதம்வாங்கி
யிதமாகத்தேய்த்துநீகாயப்போடு
சென்னியேகபாலமதிற்றிரியைப்போட்டு
தீர்க்கமாய்முன்தயிலந்தன்னைவாரோ. (௪௨௩)

※கண்விழுந்தானைசட்டி-கண்விட்டசட்டி.

வாத்துமேதிப்பிட்டுக்காத்தாடாமன்
மைந்தனேகூடையிட்டுகவிழ்த்துமூடு
பாத்துமேயந்திடத்தைச்சுத்திபண்ணி
பணையனுடச்சக்கரத்தைவைத்துப்பூசி
காத்துமேபூசைசெய்யதேவிவாலைக்
கன்னியுடக்கிருபையினுவிளங்குமைதாஞ்

சேத்துமேபாணிதனின்மையைவாங்கிச்
செப்புவேனுகமென்றசிமிழில்வையே. (௪௨௪)

※ பனாயன் - வைரவன்.

பிரசண்டவைரவத்தியானம்.

வைத்துமேவடுசனுடசக்கரத்தின்முன்னே
மனதுவைத்துதீர்க்கமாய்ப்பூசைசெய்து
வைத்துமே-ஹரிஓம்-பிரசண்டவைரவா-யநம
வா-வா-வருகவென்றுநீயும்
வைத்துமேபோகாதேமூவாயிரமுமோது
மப்பனேபிரசண்டவைரவனுந்தோனும்
வைத்துமேமனமடங்கித்தெண்டஞ்செய்து
வந்தகுருநாதனையும்பணிந்துபோற்றே. (௪௨௫)

போற்றியேமையதனையெடுத்துவைத்துப்
பூட்டுவாய்முப்பூவின்தயிலஞ்சேர்த்து
நாற்றிசையுந்தானறியமையெடுத்து
நாட்டடாக்கண்ணாடிச்சில்விமேலே
தேற்றியேபிரசண்டவயிரவனைப்போற்றித்
தீர்க்கமடாமைதானுமென்னசொல்வேன்
சாற்றியேமையதனைத்திற்றும்போது
தரணிதனிற்புதைகளெல்லாங்காணுந்தானே. (௪௨௬)

காணவேபுதைகளெல்லாம்பிரசண்டமூர்த்தி
காட்டுவாருந்தனுக்குக்கண்ணிற்றானுந்
தோணவேபுதைகளெல்லாமெடுக்கும்போது
சுற்றிநின்றபூசமுதற்கணங்களெல்லாம்
நாணவேபோகுமடாவைரவனைக்கண்டால்
நற் ※ றேசிக்கொழுப்பிலேதீபமேற்றி
பூணவேவயிரவனைச்செபித்தாயானாற்
பிரிந்துமேயோடுமடாவறிந்துபாரே. (௪௨௭)

※ தேசி - குதிரை.

பாரப்பாசித்தர்வர்மறைப்பையெல்லாம்
பார்க்கலாமஞ்சனத்தின்பார்வையாலே
சேரப்பாசித்தூரத்திலர்தமையுந்
திறமானமூலிகைகள்காணலாகும்
வாரப்பாவாரிதியிலொளித்துவைத்து
வாழலையென்றவுப்புமுதற்காணலாகும்

நேரப்பாமையினுடபோக்கேகண்டால்
திலக்குமடாவஷ்டசித்துங்கைக்குளாமே. (சஉஅ)

மாரணத்தின்சக்கரம்.

ஆமப்பாசொல்லுகிறேனின்னஞ்சேளு
அதிதமென்றமாரணத்தின்போக்குதன்னைத்
தாமப்பா ※ வயத்தாலேதகடுபண்ணி
சாத்தடாவாறுவரைசரியாய்க்கீறிப்
போமப்பாயிருபத்தஞ்சறையுமாச்சு
போக்கோடேசிவயநமா-வென்றுபோட்டு
வாமப்பாசுற்றியேசூலமிட்டு
வகையாகவிதன்விபரமறிந்துபாரே. (சஉகூ)

※ அயம்-இரும்பு.

மாறியேவறைதோறுமெழுத்தைக்கூட்டி
மைந்தனேமுன்சொன்னபடியேநீயும்
மீறியேசக்கரத்தையடைத்துக்கொண்டு
மீருதேவெதிராளிபேரைநீயுங்
கீறியேவட்சரங்கட்டவிழ்துப்போடு
கேளடாவவனுடையகருவைநீயுங்
கோரியேநீர்க்குழிமலங்கட்டந்நார்
கூட்டவேகருவின்னங்கூறுவேனே. (சஙD)

மாரணத்தயிலம்.

கூறுவேன்கரும்பாம்பின்விஷத்திறேடு
கூட்டடாகருநபிக்கழஞ்சுக்காலும்
வாறவேயைங்கோலமதிலேசேரு
வப்பனேமாரணத்தின்தயிலத்தாலே
சேறவேயவன்கருவுமலமுங்கூட்டுத்
திரட்டவேதானைத்துத்தகட்டிற்பூசி
மாறவேமுன்கருவாம்விலக்குச்சீலை
மைந்தனேவைத்துருட்டிச்சொல்லக்கேளே. (சஙக)

கேளடாசிவந்ததொருவரணைக்குள்ளே
கீறியேசக்கரத்தைப்புதைத்துநீயுஞ்
சூளடாயிரும்பாலேகம்பிசுத்தித்
தூக்கியேதலைகீழாய்ச்சொல்லக்கேளு
பாளடாபோகாமற்காக்கைக்கூட்டைப்
பரிவாகத்தானெடுத்துச்சொல்லக்கேளு

வாடாகுச்சியெல்லாம்பொருக்கிக்கொண்டு
மைந்தனேயோமமொடுவேப்பெண்ணெய்விட்டே. ()

விட்டுநீயோதிடுவாய்சக்கரத்தினின்று
விருதுபெற்றமாரணத்தைச்சொல்லியேதான்
தொட்டுநீவாயிரத்தெட்டுருவும்போடு
சொல்லியேயவன்பேரும்செபித்துப்போடு
பட்டுமேமாண்டிடுவாராராகிலும்
பரமனுன்முடியாதுவிலக்கவென்றாற்
சுட்டுமேசாம்பலெல்லாம்வாரிக்கொண்டு
தூற்றடாவவன்குடியுந்தூளாய்ப்போமே. (௬௩௩)

போகுமேகாகமுந்தான்பறந்தாப்போலே
போக்கோடேகுடிகளெல்லாஞ்செத்துப்போகுஞ்
சாகுமேயவன்குடிகளாடுமாடுந்
தானனைத்தவன்குடியுஞ்சேதமாகும்
வேகுமேயவன்குடிகளுள்ளதெல்லாம்
வெகுகோடிபாவமிதுசொல்லிவிட்டேன்
பாகுமேதம்பனத்தைச்செபித்தாலாகு
லப்பனேவந்தமட்டுநிற்குந்தானே. (௬௩௪)

உச்சாடனம்.

தானென்றவுச்சாடனத்தைச்சொல்லக்கேளு
தானிடுவாய்முன்போலச்சக்கரத்தைநீயும்
பானென்ற-மசிவயந-வென்றுபோடு
பக்குவமாய்நடுவணையைப்பிடித்துமாறு
ஊனென்றவற்றைகளெல்லாஞ்சூலமிட்டு
வுசரவிருவறைபோட்டுக்கோட்டையாக்கி
மானென்றவாசல்வழிதேவதைகளூட்டி
மைந்தனேலக்கத்தைவறைந்திடாயே. (௬௩௫)

வறைந்துமேமெழுகுடனேகோரோசினையுங்கூட்டி
மார்க்கமென்னமுப்பூவின்றயிலத்தாலே
உறைந்துமேநீயறைந்துப்பூசிப்போடு
உண்மையதாய்த்தாமரையின்பூவில்வைத்துக்
கறைந்துமேமனமுருகித்தியானஞ்செய்நீ
காட்டேரிப்பூதமுதற்கைக்குள்ளாகும்
பறந்துமேதேவதைகட்பேசும்பாரு
பார்க்கவேசொல்லுகிறேனின்னங்கேளே. (௬௩௬)

ஆக்கிருஷ்ணம்.

கேளடாவாக்கிருஷ்ணஞ்சொல்லக்கேளு
  கிறடாமுன்போலேசக்கரத்தைநீயுந்
தாளடா-வ-ய-ந-ம-சி-யென்றுமாறித்
  தாக்கடாலக்கத்தைச்சரியாய்நீயுங்
கோளடாவாராமலாதிவாரங்
  கொடுமைபெறச்சக்கரத்தைவைத்துநீயுஞ்
சாளடாகுங்குமத்தைதிறையச்சாத்திச்
  சார்வாகச்செவ்வல்லிப்பூவும்போடே. (௪௰௭)

போடவேமுன்சொன்னதயிலத்தாலே
  பூட்டியேகற்பூரங்களாத்துக்கொண்டு
நாடவேப்பின்னாலேபூசிப்போடு
  நலமாகச்செம்பருத்தம்பூமேல்வைத்து
வாடவேவேண்டாநீமுன்னேசொன்ன
  வாய்த்திட்டமந்திரத்தைதியானஞ்செய்நீ
சாடவேவாயிரத்தெட்டுருத்தான்போடச்
  சமுசியங்களில்லையடதப்பாவாரோ. (௪௰௮)

வாருகேள்பூமியிலுள்ளதேவர்
  வார்த்தையிட்டாலுன்னேவற்கேழ்க்கும்பாரு
பேருகேளுலகமெல்லாம்பிரகாசிக்கும்
  பெருமைபெற்றராஜரெல்லாம்வணங்குவார்கள்
வேருகேளுன்னுடையவில்லந்தன்னில்
  வேண்டினவர்பேரையிட்டுதியானஞ்செய்தால்
நேருகேளுன்னிடத்தில்வருகுவார்பார்
  நீயறிந்துமாயத்திற்சிக்கொண்ணாதே. (௪௰௯)

சிக்கினால்பாவம்வருமுந்தனுக்குந்
  தேவியுமேசபித்திடுவாள்நாசமாகும்
வெக்கவேயெந்தனுக்குப்பாவமாகும்
  விருதுபெற்றசித்தனென்றபெருமைபோகுந்
தைக்கவேயிந்நூலிற்சாபம்போட்டேன்
  தான்பயந்துசித்தரெல்லாமயங்கினார்கண்
மெய்க்கவேசொல்லிவைத்தேனிந்தநூலில்
  வெளிவிட்டாலுந்தனக்குச்சாபந்தானே. (௫௰)

தானென்றசாபமதுசுத்திக்கொண்டு
  சண்ணுமடாவுன்குலத்தைத்தடையில்லாமல்
ஊனென்றசாபமதுதொடர்ந்துதென்று
  லொருநாளும்பலியாதுவுண்மைசொன்னேன்

நானென்றவிழியாட்டானெனக்குச்சொல்ல
நன்ருகசாஸ்திரத்தின்மறைப்பையெல்லாங்
கோனென்றகுருவருளாற்கண்டேன்யானுங்
கூறினேனென்னூற்றின்றிறமைதனே. (௪௪௧)

பேதனத்தின்பொடி.

நானென்றபேதனத்தின்பொடியைச்சொல்வேன்
தனித்திருந்தபச்சோந்திசமூலம்வாங்கி
மானென்றபினம்பிறிந்தவண்டப்பா
மைந்தனேதலையதனைநறுக்கிக்கொண்டு
ஊனென்றசெய்யானுங்குழிநரியின்மண்டை
யுத்தமனேவலியனுடதேசியுச்சி
வானென்றவார்த்தையுடன்கடிநாய்மண்டை
மார்க்கமென்றகொம்பிழந்தமந்தியாமே. (௪௪௨)

ஆமேதானிதனுடையமண்டையோடு
வப்பனே * மதிமயக்கி * யாகாயமூலி
போமேதான்புளியன்மேற்புல் லூரியோடு
போக்கோடே * பின்றுடரி * பூனைமூலி
வாகுமேயிருதலையின்மணியினோடு
மைந்தனேசுழல்வண்டுவகையாய்க்கூட்டி
ஏகுமேயிவையெல்லாஞ்சமனுய்க்கொண்டு
இடித்துமேதூட்பண்ணிவைத்திடாயே. (௪௪௩)

* மதிமயக்கி-திகைப்பூண்டு * ஆகாயமூலி-ஆகாயத்தாமரை

* பின்தொடரி- ஆடையொட்டி * பூனைமூலி-குப்பைமேனி.

மோகினிமந்திரம்,

வைத்துமேமோகினிமந்திரத்தைக்கேளு
வகையாக-ஹரி-ஓம் சர்வமோகினி-வா-வா-வென்று
வைத்துமேசொல்லிவிட்டேன்லட்சம்போடு
வேதாந்தமோகினிகைவசமேயாவாள்
வைத்துமேபூசைகளுந்திறமாச்செய்து
வகையாகவாலாத்தியேற்றிபின்பு
வைத்துமேகெண்டுநீபொடியைவாரி
வையடாப்பேச்சுனாயின்கும்க்கைதானே. (௪௪௪)

தானென்றபொடியைநீபதனம்பண்ணித்
தானெடுத்துப்பணவிடைநானிகத்திலேவைத்து

ஊனென்றமனிதருடமேலேதுவ
ஆமையைப்போல்யாவருந்தானும்பின்னாலே
நானென்றமதிகெட்டுவருவார்பாரு
நன்றாகச்சொல்லிவைத்தேனிந்தநூலில்
வானென்றபட்சியொடுமிருகமெல்லாம்
வந்திடுமுன்பிறகேமைந்தாபாரே. (௪௪௫)

பார்க்கவேசீவசெந்தைப்பேதியாதே
பாவம்வருமதனாலேதோஷத்தோடே
மேர்க்கவேயுன்தாயார்பேதனமேசெய்வா
ளென்னசொல்வேன்பின்னாலேவருவாளப்பா
சேர்க்கவேயவளைநீதொடர்ந்துங்கேட்டாற்
றீர்க்கமாயுந்தனுக்குக்கற்பமீவாள்
காற்கவேயவள்பகத்தினின்றயானால்
கன்னிகையாளுந்தனுக்குக்கருச்சொல்வாளே. (௪௪௬)

பெண்வீடுமாவீடு.

கருவாகபோக்கொன்றுசொல்லக்கேளு
காட்டுவேனிம்மருந்துகவடில்லாமல்
உருவானபொற்கையான்வினையினோடு
வோதுவேனைவிரலிவித்துக்கூட்டி
அருவானவிப்புலியுமவுரிவேரு
மப்பனேபுல்லாமணக்கின்வேருந்
திருவாகைகுழியானைச்சுழல்வண்டோடு
தீர்க்கமாயாவளையின்பட்டைக்கூட்டே. (௪௪௭)

கூட்டியேயவளுடையசிறுநீராலே
குளிகைபெறத்தானுருட்டிவைத்துக்கொண்டு
நாட்டியேயவளுடையவிலக்குநாளில்
நன்றாகத்துணின்முடிந்துநாதம்வாயில்
ஊட்டியேமூன்றுநாள்வழித்துக்கொண்டு
வுறுதிபெறத்தானெடுத்துசொல்லக்கேளு
வாட்டியேபுருடனுக்குநெய்யிலேதான்
மைந்தனேவுண்ணெயிலேநாட்டுவாயே. (௪௪௮)

நாட்டவேயவளடிமையாகிப்போவான்
நன்றாகத்திருகிறமருந்தைக்கேளு
வாட்டவேகூழ்ப்பாண்டக்காய்நறுக்கிக்கொண்டு
வப்பனேதேங்காய்ப்பால்விட்டுக்காச்சி

கூட்டவேமூன்றுநாட்டின்றுயானாற்
குலைந்துவிடுமருந்தினிடவேகந்தானும்
வாட்டவேயின்னமொருவசியங்கேளு
மைந்தனேதலைச்சுருளிவேரைவாங்கே. (௪௪௯)
கீழ்ப்பாண்டக்காய்-சாம்பற்பூசக்காய்.

புருஷருக்குஸ்திரீவசியம்.

வாங்கியேவுனக்கானபெண்களோடு
மாதாந்தச்சிலைதனில்வைத்துருட்டி
பாங்கியேபாயிபாயி-வா-வா-வென்று
பண் பாகவாயிரத்தெட்டுருத்தான்போடு
தூங்கியே திரியாதேயனவில்வாட்ட
சுழன்றோடியுன்னிடத்தில்வருவாள்பாரு
நீங்கியேயின் னமொன்றுச்சொல்லக்கேளு
திளைவாகவலியன்றன்பித்துவாங்கே. (௪௫௰)

பித்துடனேவித்துமதிற்சேர்த்துக்கொண்டு
பெருமையென்றமங்கையர்க்குக்கொடுத்தாயானால்
சுத்தமுடன்வெற்றிலையிற்கொடுக்கவேணுஞ்
சொல்லுவேனுன்னடிமையாகிப்போவாள்
பத்தமுள்ளபுருஷனையும்வெறுத்துப்போவாள்
பரிவானபூடுவகைசொல்லொண்ணாது
சித்தமுடனின்னமொருயிடுமருந்து
செப்பிடுவேன்கொல்வையுடவிரையைவாங்கே. (௪௫௧)

இடுமருந்து.

வாங்கியேகழஞ்சயிடையெடுத்துக்கொண்டு
வகையாகச்சுழல்வண்டுவஞ்சுபோடு
எங்கியேபேய்க்கருப்பன்சாற்றைவிட்டு
இறுகநன்றயரைத்ததனைச்சொல்லக்கேளு
நீங்கியதோருணதுவிந்துக்கூடச்சேர்த்து
நேருபடத்தானரைத்துச்சாந்துபோலே
தேங்கியேநிழல்பதமாயுலர்த்திக்கொண்டு
தேடியேயனவிவிட்டுத்திரும்பக்கேளே. (௪௫௨)

கேளப்பாயுன்னிடத்தில்விலையுமாகி
கேட்டதெல்லாந்தான்கொடுத்தடிமையாவாள்
சூளப்பா※தொட்டாக்கால்வாடிச்சாற்றை
சொற்பெரியமாதருடவிலக்குச்சிலை

வாளப்பாவாங்கிவந்ததிலேபூசி
மைந்தனேநிழலுலர்த்திவைத்துக்கொண்டு
நாளப்பாதிரியோட்டதலைக்சுருளியோடு
நலமானவேரைத்தான்வைத்துருட்டே (௪௩)

உருட்டியேமோகினிமந்திரத்தைச்சொல்லி
யோதுவாயுருத்தானும்வாயிரத்தெட்டு
தெருட்டியேநெய்விளக்கில்வாட்டும்போதிற்
றியங்காமற்றெரிவையங்கேவருவாள்பாரு
வருட்டியேயென்தாயார்கிருபையாலே
மயங்காதேமாயத்தில்மருண்டுபோவாய்
அருட்டியேமிகுத்தாலுமுன்னஞ்சொல்வே
னப்பனே※லூமையென்றபூச்சிக்கேளே. (௪௪)

ஊமைப்பூச்சி - அட்டை.

கேளேநீயட்டைதனைப்பிடித்துவந்து
கிருபையாதாமரைநூலதனைச்சுற்றி
ஆளேநீயகலிவிட்டுநெய்யைவார்த்து
அப்பனேதீபமதிற்சிரசோடொன்றும்
பாளேநீயவ்வோட்டின்மையைவாங்கிப்
பாங்கானபுனுகுடனேசவ்வாதுசேர்த்துக்
நாளேநீமோகினியைநூற்றெட்டோதி
நலமாகப்பணவிடைதான்றிலர்தந்திட்டே (௪௫)

இட்டையிலேவெறிகொண்டநாயைப்போலத்
திரிவாள்பாருன்னிடத்தின்மதங்கொண்டேதான்
வாட்டயிலேயுனக்கடிமையாகிப்போவா
ளப்பனேயின்னமொன்றறையுமேதென்பின்
நாட்டயிலே※யிந்திரமாங்கோபப்பூச்சி
நன்றாகப்பத்துமட்டுமெடுத்துக்கொண்டு
ஊட்டயிலேவிந்துவுடன்புழுகுகூட்டி
வோகோகோபச்சையென்றபூரத்தானே. (௪௬)

※இந்திரப்பூச்சி - தம்பலப்பூச்சு,

வசியமை.

தானென்றகோரோசினையுஞ்சரியாய்க்கூட்டி
தப்பாமற்செம்பருத்தம்பூச்சார்விட்டு
ஊனென்றேதானரைத்துகயிறுபோல
வுருட்டியேமோகினிமந்திரத்தைச்சொல்லி

நானென்றேவாயிரத்தெட்டுருத்தான்போடு
நாட்டடாப்புருவமையந்திலர்தம்போடு
மானென்றமங்கையருமரசரெல்லாம்
வசியமடாஜெகமேழும்வசியமாமே. (௪௫௭)

ஆமென்றவிந்துச்சார்விந்துக்கூட்டி
யதனுடனேபசுவின்கோரோசினையும்
காமென்றதேன்விட்டுமத்தித்தேதான்
கருத்தாகச்சிமிழில்வைத்துமோகினியைச்சொல்லி
சீமென்றதிலர்தமையாத்திலர்தம்போடு
ஜெகமெல்லாம்வசியமடாயின்னங்கேளு
றூமென்றதைவேளைவேரைவாங்கி
துப்பறவாய்த்தான்சமூவிவிந்துதாக்கே. (௪௫௮)

விந்துத்தம்பனம்.

தாக்கியேதானரைத்துண்டைபண்ணித்
தன்வாயிலிட்டுநீபுணர்ந்தாயானால்
வாக்கியேநின்றதொருவிந்துவையா
மருவினால்விழுகாதுதம்பனமுமாகும்
தீக்கியேதம்பனத்தைத்தியானம்பண்ணி
நிலவரமாய்ச்சொல்லிவைத்தேனின்னங்கேளு
போக்கியேமறைப்புண்டுமறைப்பையானும்
புகலுவேனுன்னுருத்தான்மறையவென்றே. (௪௫௯)

மறைப்புமை.

மறையவேசொல்லுகிறேன்தேசிப்பித்தும்
மைந்தனேகரும்பூனைக்கண்ணும்பித்து
பறையவேகுழியானைநாதவிந்தும்
பருவமாஞ்சமன்கொண்டுமுதலாஞ்சீலை
கறையவேதானரைத்துத்திரித்துக்கொண்டு
கருவாமணக்கெண்ணெயகவிலிட்டு
திறையவேகருந்தேசிமண்டையோட்டில்
நீதிபெறமைவாங்கிவைத்திடாயே. (௪௬௰)

வையடாமாவிலிங்கஞ்சிமிழிலேதான்
வைத்துமேமுன்போலேபூசைசெய்து
மெய்யடாபாணிதான்மறைந்துபோகும்
வெகுசருக்குமுன்சொன்னதயிலம்பூசி

கையடாவிதுவுனக்குத்தெரியும்பாரு
　கருத்துவைத்துநீயப்பாசிமிழுதன்னை
பொய்யடாவொருநாளும்போகாதப்பா
　போட்டிடவுமுன்னுருவமறையுந்தானே. (௪௱௧)

தானென்றஜாலவித்தையனந்தஞ்சொன்னேன்
　தப்பாதொருமுறையுஞ்சார்வுமெத்த
வானென்றவமுறையைச்சொன்னேன்யானும்
　மறைத்தார்கண்மூலவர்க்கப்பிள்ளையல்ல
தேனென்றமொழியாளேயிதற்குவாசான்
　செப்பினுளதையறிந்துதிறமாய்ச்சொன்னேன்
கோனென்றவென்தாயார்வாமபூசைக்
　கூறவேகன்னியுடமாதங்கூட்டே. (௪௱௨)

கூட்டவேகன்னியுடமாதந்தன்னில்
　கூறுவேனஷ்டதிக்குமெல்லாம்வெல்ல
ஊட்டவேயோடுநதிக்கரையோரத்தி
　லுத்தமனேசமநிலமாவொழுங்காய்ப்பார்த்து
நீட்டவேபத்தவிட்டுநூற்றிருபத்தஞ்சு
　நேர்படவேயுன்னடியாலளந்துக்கொண்டு
நாட்டவேயீசானியமூலைதன்னில்
　நலம்பெறவேயரசன்காற்கொண்டூணே. (௪௱௩)

ஊணவேகால்தானுமன்பத்தொன்று
　வுத்தமனேயூணிநீசொல்லக்கேளு
நாணவேயடிதானுமன்பத்தொன்று
　நாட்டடாநடுமையந்தன்னிலேதான்
காணவேசவுக்கமாயளந்துக்கொண்டு
　கட்டடாவொருகோட்டைவாசல்விட்டு
தோணவேயதற்கப்பால்சொல்லக்கேளு
　சுருதியாய்நடுமையந்துண்டுபாரே. (௪௱௪)

பாரேநீயிருபத்தஞ்சடியுமிட்டு
　பண்பாகக்கோட்டையிட்டுவாசல்விட்டு
சேரேநீயதற்கப்பால்நடுமையத்தில்
　திறமைபெறவஞ்சடிநீயளந்துகொண்டு
நேரேநீகுழிவெட்டிசவுக்கமாக
　நின்னடியால்ரண்டரையளந்துக்கொண்டு
காரேநீயக்கியத்தின்குழியுமாச்சு
　கட்டடாயதைச்சுற்றிக்கோட்டைதானே. (௪௱௫)

தானென்றகோட்டைகட்டிவாசல்நாலு
சாதகமாய்த்துறக்காதேபடிபோற்கட்டு
ஊனென்றபடிமுகப்பிற்சிம்பவாய்போ
லொழுங்காகக்கட்டிவேசொல்லக்கேளு
தேனென்றமண்டபந்தான்முடிந்தபின்பு
செப்புவேன்முட்கோட்டைதன்னிலேதான்
மானென்றபதினைஞ்சுகோணத்துக்கு
மைந்தனேதிண்ணையதுவளமாய்ப்போடே. (௪௬௬)

போடவேயதற்கப்பால்ரண்டாங்கோட்டை
வுனிதமுடனஷ்டதிக்குமெட்டிலேதான்
நாடவேபீடமதெட்டும்போட்டு
நலமாகவதற்கப்பால்சொல்லக்கேளு
வாடவேபீடமதுயாத்தாளுக்கு
வஞ்சடிக்குவப்பாலேபோட்டுத்திரு
தேடவேபீடமதுவிரல்தானீளஞ்
செப்புவேனிருபத்தஞ்சங்குலமுமாமே. (௪௬௭)

ஆமென்றவங்குலமுமுயரங்கேளு
அப்பனேயஞ்சுவிரலங்குலமும்போட்டு
தாமென்றமுதற்கோட்டைதிண்ணையெல்லாஞ்
சமரசமாயங்குலமொன்பதாகும்
மானென்றநடுக்கோட்டைபீடமெல்லா
மாட்டடாயெட்டுவிரற்கனந்தான்திண்ணை
ஊமென்றவுயரமதப்படியேயாகு
மோகோகோகொலுபீடமுசத்திதானே. (௪௬௮)

தானென்றபீடமதுமுடிந்தபின்பு
சாத்தடாமேற்கட்டிப்பந்தலெங்கும்
மானென்றவென்தாயாரிருக்கும்பீடம்
வன்னமென்னசிவந்ததிறமாகச்சோடி
வானென்றசத்தியுடதலைக்குமேலே
மைந்தனேசெஞ்சரிகைப்பட்டுசாத்தி
ஊனென்றகொலுபீடந்தனக்குமுன்னே
பூணவேகொடிமரத்தைச்சொல்லக்கேளே. (௪௬௯)

கேளடாகூவிளத்தின்கம்பம்நாட்டி
இருபைபெறவேணுமென்றுதியானஞ்செய்து
வாளடாபந்தலின்காலுள்ளதெல்லாம்
மைந்தனேவாழையுடன்கமுகுநாட்டி

சூளடாமாவிலையாற்பந்தலெங்கும்
தோரணங்கள்கட்டியேசொல்லக்கேளு
கோளடாவாராமல்திரையினாலே
கூறுவேன்வாசல்விட்டுமரத்தைநாட்டே. (௪௭௰)

நாட்டியேகொடிமரத்திற்பீடம்போட்டு
நன்றாகமுன்னாலேநந்திபீடந்
தாட்டிகமாய்ப்பீடமிட்டுவட்டமாக
தானிட்டுயப்பால்நீசொல்லக்கேளு
ஊட்டியேஸ்வாமியுடகொலுபீடத்தி
லுத்தமனேயிலைபரப்பிநெல்லுமிட்டு
கூட்டியேவெற்றிலையைப்பரப்பிநீயுங்
கூறுவேனொருபடியினரிசிகொட்டே. (௪௭௧)

கொட்டியேயதின்மேலேதாமரையின்பூவை
குருவருளைப்போற்றிநீயதின்மேல்வைத்து
ஒட்டியேபுருவமையந்தன்னில்நின்று
வோகோகோதேவியுடசக்கரத்தைநீயு
மட்டியொன்றுநினையாதேயதின்மேல்வைத்து
வாவியென்றபிராணத்தைத்தேத்தம்பண்ணி
கட்டிவேகும்பத்தில்நூலைச்சுத்தி
கருணைதரவேணுமென்றுயதின்மேல்வையே. (௪௭௨)

வையப்பாஜலத்தைவிட்டுமாவிலையுஞ்சாத்தி
மார்க்கமாய்த்தேங்காயையதின்மேல்வைத்து
மெய்யப்பாசொல்லிவைத்தேனென்தாய்க்குத்தான்
வெகுபிரியஞ்சிவப்பானபட்டுஞ்சாத்தி
பொய்யப்பாசொல்லவில்லையவட்குத்தானும்
பூட்டடாவாபரணம்பொட்டுக்காரை
மெய்யப்பாபுழுகோடுஞ்சவ்வாதுஞ்சேர்த்து
விருதாகப்பரிமளங்கள்வாடைசாத்தே. (௪௭௩)

சாத்தியேபீடமதுநிறையச்சாத்தி
சார்வானவிடங்களெல்லாந்தொங்கவிட்டு
நேத்தியாய்ப்புட்பத்தாற்பந்தலிட்டு
நேரானமுப்புரிநூல்தெர்ப்பைசாத்தி
வாத்தியேயவளிடத்தில்சூலம்வாளும்
வதினோடேவாயுதங்களுள்ளதெல்லாஞ்
சாத்தியேயவளிடத்தில்வில்லுவைத்து
சதிராகவதற்கேற்றவம்புவையே. (௪௭௪)

வையப்பாவாயுதங்கள்பேரைச்சொல்லி
வளமையாயவளுடையபாதந்தன்னில்
செய்யப்பாயதற்கப்பால்ரண்டாங்கோட்டை
தீர்க்கமாயஷ்டசத்திவெட்டுநாட்டு
மெய்யப்பாசொல்லிவைத்தேனெட்டுப்பீசம்
வெண்மையென்றநெற்பரப்பிக்கும்பம்வைத்து
பொய்யப்பாசொல்லவில்லையென்த ய்போல
போதரவாய்ச்சோடித்துபுட்பஞ்சாத்தே. (௪௭௫)

சாத்தியேவந்தந்தசத்திபீசம்
தாக்கடாமுன்சொன்னபடியேநீயும்
நேத்தியாய்ச்சக்கரங்கள்சரிவாய்க்கீறி
நீயிடுவாயந்தந்தட்பீசந்தன்னை
எத்தியேயதற்கப்பால்மூன்றாங்கோட்டி
விதமாகவஷ்டதிக்குப்பாலர்தன்னை
போத்தியேவஷ்டசித்துவைரவர்கடன்னை
பூட்டடாசங்கிலியும்பூட்டத்தானே. (௪௭௬)

தானென்றவயிரவர்களெட்டுப்பேர்க்குந்
தாக்கடாவவரவர்கள்பீசந்தன்னை
ஊனென்றவவர்களுடவெழுத்தைநன்று
புத்தமனேநெல்லிட்டக்ஷரத்தைக்கீறி
தேனென்றகும்பத்தில்ஜலத்தைவிட்டு
திறமாகமாவிலையுந்தேங்காய்வைத்து
வானென்றமுப்புரிநூற்றன்னைச்சுற்றி
மைந்தனேவிபூதியிட்டுவைத்திடாயே. (௪௭௭)

வைத்திட்டுருத்திராக்ஷம்நிறையச்சாத்தி
மைந்தனேசூலமுடன்பாசந்தானும்
வைத்திட்டுப்போகாமற்செதையுட்வைத்து
வகையோடேபாயாசப்புசபூய்சாத்தி
வைத்திட்டுமாகவேதான்திக்குப்பாலர்
விருதுபெறவீடெல்லாங்கலந்துநிற்பார்
வைத்திட்டுவவர்களுடபீடந்தன்னை
மாட்டடாநெல்லையிட்டுக்கலசமாக்கே. (௪௭௮)

ஆக்கவேயவர்களுடபீசந்தன்னி
லப்பனேயிட்டுநீகும்பம்வைத்து
சேக்கவேமாவிலையுந்தேங்காய்வைத்து
தெர்ப்பையிட்டுவஸ்திரங்கள்நிறையச்சாத்தி

பாக்கவேபுஷ்பங்கள் நிறையக்கொட்டி
　　பரிவானவாயுதங்களவர்கள்கையில்
ஏக்கவேகொடுத்துவிடுசாத்திரப்படியே
　　யிதமாகப்பூசைசெய்யும்வகைகளைக்கேளே. (௪௭௯)

கேளடாகிழ்வாசல்கணபதியுங்கந்தன்
　　கிருபைபெறத்தானிருத்திதெற்குவாசல்
சூளடாதெக்ஷணாமூர்த்தியாசான்
　　சொல்லுவேன்மேல்வாசற்சண்டிகேசன்
வாளடாவடவாசற்றுர்க்கையோடு
　　மைந்தனேபீடமிட்டுக்கும்பம்வைத்து
கேளடாவாராமலவர்கட்கேற்ற
　　கிருபையராம்வஸ்திரமாபரணஞ்சாத்தே. (௪௮௰)

சாத்தியேயந்தந்தயினத்தின்பக்கந்
　　தப்பாமலாயுதத்தைகையிலீந்து
போத்தியேயவர்களுக்குப்புஷ்பஞ்சாத்திப்
　　போதரவாய்ப்பரிசனங்கள்செய்தபின்பு
ஏத்தியேமுன்சொன்னபடியேநீயும்
　　என்தாயிக்குள்ளதெல்லாமுன்பனவைத்து
நேத்தியாயிப்புரத்தில்நிறைபதேவர்
　　நேர்படவேயவர்களுக்குமப்படியேவையே. (௪௮௧)

வையப்பாயிப்படியேபீடந்தோறு
　　மைந்தனேகம்பமதுநந்திபீடஞ்
செய்யப்பாவவருடையபீடந்தன்னிற்
　　றேவிமுன்புவைத்தெல்லாஞ்சிறக்கமாட்டுங்
கையப்பாதர்ப்பையினாற்கயிறுண்டாக்கிக்
　　கட்டடாகொடிமரத்திற்கொடியைச்சேர்த்து
மெய்யப்பாசொல்லிவைத்தேன்றர்ப்பைதன்னை
　　விதமாகயடிமரத்திற்சுத்திக்கட்டே. (௪௮௨)

கட்டியேகொடிமரத்தின்மாவிலையுஞ்சாத்திக்
　　கனக்கவேசந்தனமுமஞ்சளப்பி
கெட்டியாயக்ஷதைகள்நிறையச்சாத்தி
　　கிருபைபெறவேணுமென்றுதியானஞ்செய்து
தட்டியொன்றுநினையாதேயாத்தாண்முன்பு
　　தான்பெருகத்தேங்காயையுடைத்துவைத்து
நாட்டிலேயுள்ளதேவதைகளெல்லாம்
　　நிதிபெறவேதேங்காயையுடைத்துவைத்தே. (௪௮௩)

உடைத்துமேதீபமோடூபங்காட்டி
வுள்ளத்திற்றுதிகள்செய்தபின்பு
சடைத்துமேபோகாதேமனஞ்சோம்பாதே
தாயுனக்குவேண்டியதுதருவாளப்பா
படைத்துமேமுன்சொன்னபடியேநீயும்
பாரியெனுந்தெர்ப்பையினாற்கயிறுகட்டி
மடைத்துமேகோடிந்தருப்பையாலேநீயு
மப்பனைகட்டிநீயிருந்திடாயே (௪௮௪)

இருந்துகொண்டுயெக்கியமாங்குழிமுகத்தி
லென்னசொல்வேனெட்டுவகையமுதினாலே
பொருந்தவேயக்கினியைமூட்டிநீயும்
போக்கோடேயாவினெய்யோமஞ்செய்து
வருந்தவேயெக்கியத்தின்படியேநீயு
மாருதிகட்செய்தபின்புசொல்லக்கேளு
திருந்தவேதேவியுடபீசந்தனனிற்
றியானித்துயெக்கியத்திலோமஞ்செய்யே. (௪௮௫)

செய்யப்பாதேவியுடமந்திரத்தினாலே
செய்பாகங்கைபாகந்திர்க்கமாக
மெய்யப்பாவுருத்தானுமாயிரத்தெட்டானான்
மேன்மையாய்த்தேவதைகட்பீசந்தனை
வையப்பாவுருத்தானும்நூற்றெட்டோதி
மார்க்கமாய்த்தேவதைகட்டானொன்றுக்கு
நெய்யப்பாவிட்டல்லோசமத்தோடொக்க
நேராகநெற்பொரியுங்கலந்துசெய்யே. (௪௮௬)

கலந்துநீசெய்யுகிறவரிசைகேளு
கருதவேவிரதமையத்தொட்டுநீயும்
நலந்துமேநவமிநாளொன்பதுக்கு
நாட்டவேயுருத்தானும்லக்ஷமாக
வலந்துநீபோகாதேயொருபோதப்பர்
வாவின்பாற்கொண்டுநீவிரதமாகக்
கலந்துநீபுட்பத்தாலருச்சனையேசெய்ய
கருகவேவந்திடுவாளென்தாய்பாரே. (௪௮௭)

பார்க்கவேயென்தாயார்வந்துநின்றாற்
பணிந்திடுநீயவள்பதத்திற்சிரசிற்றட்ட
வேர்க்கவேதேவர்கணங்கோடிசூழ
வெட்டுபேர்வயிரவர்கட்காத்துநிற்கக்

கார்க்கவேபட்டசித்துபெட்டுபெருங்
கைகட்டிப்பணிவிடைகள்செய்துநிற்க
வார்க்கவேயஷ்டசித்துப்பாலரோடு
மம்மனுடகொலுபீடத்திருப்பார்பாரே. (௪௮௮)

பாரப்பாவிப்படியேதேவர்சூழ
பராபரியாள்வந்துநின்றுன்னைப்பார்த்து
வாரப்பாயிப்படிநீபூசைசெய்ய
வருளேதுவென்றுசொல்லிக்கேட்டாளானாற்
சீறப்பாரோமனுடபிள்ளையென்று
செப்பிடுநீயப்போதுதேவிதானுந்
தேறப்பாயென்னையுமெய்யழைப்பாள்பாரு
சிணத்திலேவந்திடுவேன்திறமைபாரே (௪௮௯)

திறமையென்னையென்தாயார்கொலுவின்முன்னே
தீர்க்கமாயுன்முகத்தைப்பார்த்துநானும்
பருதிவெனுமனோமணியாள்பாதந்தன்னிற்
பணிவிப்பேன்நீகேட்டபொருள்களெல்லாந்
தருதுவேனென்றுசொல்லிவிடுவாள்நீயுந்
தரணிதனையாளவென்றுவின்னங்கேளு
சாருமென்றுவாயுதங்கள்வேணதெல்லாங்
கைகொடுப்பாள்நீயுமதைவாங்கிக்கொள்ளே. (௪௯௰)

கொள்ளவேவாயுதங்களுள்ளதெல்லாங்
கொடுத்திடுவாள்சுற்றில்நின்றதேவரெல்லா
மள்ளவேவாயுதத்தினினங்களெல்லா
மவரவர்கள்சொல்லியதைவாங்கிக்கொண்டு
மெள்ளவேயட்டதிக்குமெங்கும்வென்று
மீண்டுவருமுன்னிடத்திலாயுதமும்பாரு
தள்ளவேயுனக்கிடுமெதிரியுண்டோ
தப்பாதுவாயுதத்தின்சார்வுதானே. (௪௯௧)

தானென்றுயிப்படிநீசெய்தாயானால்
சாயுச்சியபதந்தன்னைச்சேரமாட்டாய்
தேனென்றமொழியுடையாள்யென்தாய்தன்னைத்
தீர்க்கமாய்காயசித்திக்கேற்றகற்பம்
மானென்றபதியுடையாட்டன்னைக்கேட்டால்
வழங்கிடுவாள்திரிபிஷதத்திற்சித்தியாகு
மோமென்றும்பொருளுரைப்பாளுனக்குமைந்தா
வொருநொடியிற்காயசித்தியாகுமெண்ணே. (௪௯௨)

எண்ணவேவரிசையுடனட்டசித்தி
யிதயானகாயசித்திஞானசித்தி
கண்ணவேமுகூர்த்தமதொன்றுக்குள்ளே
கைவசமாய்முடிப்பதற்குவகையுஞ்சொல்வாள்
பண்ணவேயெக்கியத்தின்பூசையாலே
பலித்துதடாகாயசித்தியுனக்குமைந்தா
வண்ணவேயெந்தனுக்குக்கீர்த்தியாச்சு
வதிதமென்றகெவுனத்தைஅறிவிப்பேனே. (௪௯௩)

அறிந்துமேகெவுனத்திற்சித்தரோடு
மறைத்துப்போயெந்தனுடபிள்ளையென்று
பரிந்துமேபுசுண்டருடப்பதத்தில்விட்டு
பாராபரையாண்டிருந்தசித்தனென்றுசொல்வித்
தெரிந்துமேகெவுனமென்றகுளிகைதன்னைத்
தீர்க்கமாயுந்தனுக்குக்கொடுத்தேன்பாரு
சொரிந்துமேசுரூபசித்திபெற்றானென்று
சொல்லுவார்புசுண்டவர்க்கமென்றுதானே. (௪௯௪)

தானென்றவிப்படிநீபேறும்பெற்று
தாய்பதத்தைப்பூசித்தாற்சித்தனாவாய்
வானென்றயோகினியாளாதிவாரம்பூசை
வரிசையாயிப்பூசைவளமாய்ச்செய்வார்
தேனென்றராசனென்றால்வெள்ளியிற்பூசை
செய்துமேவாயுதங்கள்வாங்குவார்பார்
மானென்றவாயுதத்தான்மாண்டசேனை
வையகங்கள்கொள்ளாதுமருவிப்பாரே. (௪௯௫)

மருவவேவாயுதத்தின்போக்குச்சொன்னேன்
மறைத்தார்கட்சித்தரெல்லாங்கலியுகத்தில்
சருவவேயவர்களுடசேனையெல்லாந்
தவிடுபொடியாகினதோர்தன்மையாலே
உருவவேயித்தொழிலையொளித்தார்பாரு
மோகோகோமொருவருக்குந்தெரியாமற்றான்
அருளவேவெளிதனிலேநடனஞ்செய்த
வையருடபாதமதையருட்செய்வேனே. (௪௯௬)

அருளுவேனகாரமென்றுஞானந்தன்னை
யறியாமல்ஞானியவராதயாய்ப்போனார்
பொருளவேதொன்றுமில்லைசிலத்தின்தீட்சை
பூட்டுவேன்சத்தியுடதீட்சையெல்லா

மருளவேசொன்னதெல்லாம்வேறொன்றில்லை
  மார்க்கமென்ன அகாரமதைசிவமதாகுந்
தெருளவேஉகாரமதுசத்தியாகுஞ்
  சேரடாவிதுரண்டுமொன்றாய்த்தானே. (௪௯௭)

தானென்றரண்டெழுத்துங்கூடும்போது
  சமுசியங்களில்லையடாயோகமாச்சு
வானென்றமவுனமடாவிதுவேயாகும்
  வையகத்திலறியாமலலைந்தார்பாருந்
தேனென்றரவிமதியுமிதுவுமாகுந்
  தீர்க்கமென்னவப்புமுப்புமொன்றாய்க்காணு
மானென்றமவுனத்தையறியாமூடர்
  மயங்கினார்வெவ்வேறேயென்றுதானே (௪௯௮)

என்றுமேசொல்லிவைத்தஞானமெல்லா
  மெவராலுஞ்சொல்லரிதுயென்னசொல்வேன்
ஒன்றுமேபொருளல்லால்வேறொன்றில்லை
  யுன்னறிவால் அகரத்தைவுள்ளேபாரு
சென்றுமேஉகரமதுவட்டம்போலச்
  சேருமடா அகரத்தின்கழுத்தின்மேலே
அன்றுமேசொன்னமொழியிதுதானப்பா
  வறிவென்றமனக்கண்ணாலறிந்துப்பாரே. (௪௯௯)

பார்க்கையிலே அகாரமதுவிரிந்துகாட்டும்
  பரிவானஉகாரமதோடிக்கொள்ளும்
மேர்க்கையிலேயிதுரண்டுமொன்றாய்க்காணு
  மிதுவல்லோஞானவெளிமுடிந்தவாறு
சேர்க்கையிலேயாறுதலமிதுக்குள்ளாச்சு
  தீர்க்கமாஞ்சொரூபசித்தியிதுக்குள்ளாச்சு
பார்க்கையிலேமூலவட்டம் அகாரபீடங்
  காட்டுமடாவாசியுடன்கருவைத்தானே. (௫௱)

கருவானஉகரத்தைநெஞ்சில்வைத்து
  கட்டடா அகரமென்றவரிவினாலே
உருவானவாசியதுவடங்கும்பாரு
  வுள்ளுக்குச்செல்லுமடாயாளும்வீட்டில்
அறிவானகருவுகளுமாண்டுபோகு
  மப்பனேவாறுதலமொன்றாய்க்காணுங்
குருவானகுருவெல்லாமனமேயாசான்
  கூட்டுமடாபெருவெளியின்மவுனந்தானே. (௫௱௧)

மவுனமென்றவெழுத்தெல்லாமகாரமென்பார்
மாண்பரேபட்டணம்போலதுவுமாகுங்
கெவுனமென்றஅகாரமடாராசனுச்சு
கூட்டிவைத்தமந்திரியுமகாரமாச்சு
தவனமென்றகருத்திலேஅகாரமாகுங்
கண்டையடாகடுவாளம்உகரமாகும்
யவனமொன்றுமில்லையடாயிதுரண்டுக்கும்
யகரவெளியதனிலேயமர்ந்தவாரே. (௫௰௨)

வாரானஞானமடாமவுனமென்பார்
வாய்மூடியிருந்ததினுலென்னவாகுஞ்
சேரேநீவாசியைத்தான்அகரவிட்டிற்
சிக்கவேதானிழுக்கவமுந்திப்போகுங்
கூரானபிடரிவழிவாசியேறி
கூடுமடாஅகரவெளியுச்சிமேலே
சீரானஉகரமதைவிட்டாயானுற்
திரும்பவதுமாட்டாதுசென்றுபோமே. (௫௰௩)

போகுமேமவுனமென்றஞானமெல்லாம்
போக்கறியார்சரிதைகெட்டநெஞ்சத்தாலே
தாகுமேமனக்கண்ணைப்பதியவைத்துச்
சார்வாகஉகரத்தையிழுக்கும்போது
வாகுமேஅகரமுடன்உகரங்கூடி
வசமாகுமண்டபகிரண்டமெல்லாஞ்
சாகுமேதத்துவங்களற்றுப்போகுந்
தப்பாதுபுசுண்டருடசார்புகேளே. (௫௰௪)

கேளடாபுசுண்டருமேயெனக்குச்சொன்னர்
கிருபைபெற்றுமவுனத்தைச்சொல்லுவேன்யான்
கோளடாவவர்பாதந்துரிதஞானங்
கொட்டினேனன்னூற்றிற்குருவையெல்லாம்
பாளடாபோகாமன்மனத்தைநீயும்
பதியவேமூலமென்றநந்திக்குள்ளே
வாளடாவுள்ளத்திலூணும்போது
மாண்டுதேடாபிறவியென்றமாயந்தானே. (௫௰௫)

மாயமென்றயோகமெல்லாமிவ்வளவேயாச்சு
மயங்கினுருலகத்தோரறியாமற்றுன்
காயமென்றயோகத்துக்கிதுவேமூலங்
காட்டினேனுள்ளபடிசுபடில்லாமல்

வாயமென்றபூவெடுக்கும்வகைகளெல்லாம்
வகையாகச்சொல்லிவைத்தேனிருநூற்றின்மே
சேயென்றவுங்களுக்கேஇந்தநூலை
செப்பினேன்கருக்களெல்லாந்திறமாய்த்தானே. ()

திரம்பெற்றநூற்றிலேசிங்கிவித்தை
திரட்டிவைத்தேன் *பாகதுபோற்றின்பாரில்லை
வரம்பெற்றவிந்தநூலன்னூற்றுள்ளே
மாட்டினேன்சவர்க்காரவுப்புதானுஞ்
சிரம்பெற்றபோகரிஷிநூற்றிற்சொன்ன
திராவகத்திற்குணமில்லைதீர்க்கம்போதா
தரம்பெற்றபுசுண்டருடபிள்ளைரோமன்
சாற்றினேன்முப்பூவைநீநீர்செய்யே. (௲௭)

* பாகு-சருக்கனாப்பாகு.

செய்துமேமுன்சொன்னநூற்றிற்றானும்
திரமாகச்சொல்லிவைத்தசிங்கிக்கப்பா
பையவேதானூட்டிவெரித்துப்போடு
பாவகமாய்நான்சொன்னமுறைகளெல்லாம்
மெய்யாசப்பணம்போலேதொட்டுபோடு
வெகுசுறுக்காய்நீறியதுபற்பமாகும்
பொய்யென்றும்போகாதுயிந்தநூலில்
பூட்டினேன்கருக்களெல்லாம்பூண்டுபோரே. (௲௮)

நூற்றொகுப்பு.

பாரப்பா நூற்சொன்னேன்பதினாறுசொன்னேன்
பரிவானவன்பதிலேரண்டுசொன்னேன்
சீரப்பாயதில்மவுனம்ஞானஞ்சொன்னேன்
சிறப்பாககுருமுறையுஞ்சொல்லிவைத்தேன்
வீரப்பாரோமரென்றுபேரும்நாட்டி
விசையெல்லாஞ்சொல்லிவைத்தேனிந்தநூலில்
ஆப்பாவவனியிலார்கொடுக்கப்போரா
ரப்பனேபுசண்டருடபதந்தான்முற்றே. (௲௯)

உரோமரிஷி வைத்தியம்.-௲.

முற்றிற்று.